ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 6 இதழ் : 4 பிப்ரவரி 2010



கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர்,
அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு
விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை;
நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்.
உபாகமம் 31:8

ஆசிரியர்

சகோ. வே. தேவதாஸ்

# உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பான வாழ்த்துக்கள். தேவன் தந்த புதிய பிப்ரவரி மாதத்திற்காக தேவனைத் துதிப்போம்.

கடந்த ஜனவரி மாதம் முழுவதும் கர்த்தர்தாமே ஊழியப்பாதையில் நடத்தி வந்தார். அனைத்து சபைகளிலும் கிறிஸ்துமஸ் பண்டிகை ஆசரிப்பு, நற்செய்தி அறிவிக்கும் திருநாளாக இருந்தது எனவே கிறிஸ்தவரல்லாதவர்கள் அநேகர் பங்குபெற்று தேவ ஆசீர்வாதத்தை பெற்றார்கள். எவ்வித தடை, பிரச்சனைகள் ஏதும் இல்லாதபடி தேவன் 520 சபைகளையும் ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மூன்று மாநிலங்களில் உள்ள சுதேச ஊழியர்களுக்கான புத்தாண்டு கூடுகை ஜனவரி 6,7,9 தேதிகளில் நடைபெறதேவன் கிருபை தந்தார். புதிய வருடத்தில் அநேகர் புதிய அபிஷேகத்துடன், அநேக தீர்மானங்களுடன் ஊழியம் செய்ய தீர்மானித்துள்ளனர். குறிப்பாக 500 புதிய சபைகளையும், 200 புதிய ஊழியர்களையும், விரைவில் எழுப்பவும் குறைந்தது 20,000 புதிய குடும்பங்களை தேவனண்டை நடத்த தீர்மானம் எடுத்துள்ளனர். இவர்களை ஜெபத்தினாலும், பொருளினாலும் தாங்க முன்வாருங்கள்.

18.01.2010 திங்கட்கிழமை அன்று நம் ஷாலோம் ஊழியத்தின் செயற்குழு கூட்டம், நாலுமாவடியில், இயேசு விடுவிக்கிறார் வளாகத்தில் உள்ள ஆத்தும ஆதாயப்பயிற்சி கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது. அனைத்து செயற்குழு உறுப்பினர்களுடன் சகோ.மோகன் சி. லாசரஸ் அவர்களும் பங்குபெற்றார்கள். புதிய தரிசனத்துடன் செயல்பட அர்ப்பணித்து தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. 2010–க்கான இலக்குகள் ஷாலோம் ஊழியத்தில், பீல் மக்கள் மத்தியில் நிறைவேற்றப்பட ஜெபியுங்கள்.

உங்கள் யாவருக்காகவும் நாங்கள் தேவனிடத்தில் அனுதினமும் ஜெபித்து வருகிறோம். எங்கள் அன்பு பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா (12th Std) இவர்களுக்காகவும், இவர்களுடைய படிப்பிற்காக ஜெபியுங்கள். நம்முடைய பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் மிஷெனரி ஊழியத்தை குறைந்தது மாதம் ஒருவருக்காவது அறிமுகம் செய்துவைக்க அன்புடன் கேட்கிறேன். மேலும் தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலக ஊழியர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**“நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னை கைவிடுவதுமில்லை”** யோசுவா 1:5

என்றவாக்கின்படி தேவன்தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

*தேவ அறுவடைபணியில் உங்கள் அன்பு சகோதரன்*

(Bishop. V. Devadass)

# "உனக்கு முன்பாக போகிற கர்த்தர்"



சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**"கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம்"** உபாகமம் 31:8

வேதத்தில் சொல்லப்பட்ட இந்த வாக்குத்தத்தத்தை தேவ தாசனாகிய மோசே யோசுவாவினிடத்தில் கூறிய தீர்க்கதரிசனமான வார்த்தைகள். 40 வருட ஊழியப்பாதையில் தலைவனோடு தோள் கொடுத்து யோசுவா நடந்து வந்தான். அடுத்து வருகிற பெரிய உத்தரவாதமான பொறுப்பை ஏற்கவேண்டிய காலத்தில் எப்படியிருக்குமோ என கலங்கின வேளையில் இந்த வார்த்தைகள் கொடுக்கப்பட்டது. நம் வாழ்க்கை பாதையிலும் நாம் கடந்து செல்லவேண்டிய பாதையிலும் நமக்கும் இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களை தேவன் தருகிறார். முதலாவது மோசே ஜனங்களை பார்த்து உபா. 31 :3–ல் சொல்கிறார் **"உன் தேவனாகிய கர்த்தர்தாமே உனக்கு முன்பாக கடந்து போவார்".** இரண்டாவதாக மோசே யோசுவாவிடம் கூறும்போது; உபா 31:8–ல் **"கர்த்தர்தாமே உனக்கு முன்பாக போகிறவர்"** என்று வாக்கு தருகிறார். இந்த வாக்குத்தத்த வார்த்தையில் 3 காரியங்களை தேவன் நமக்கு தருகிறார்.

### 1. கர்த்தர்தாமே உனக்கு முன்பாக போகிறவர் :–

தேவ ஜனங்களை பார்த்து தேவன் சொல்கிறார். நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன். (எரே 30 : 22) ஆகையால் கர்த்தரே நமக்கு முன்பாக போகிறவர். தேவ ஜனங்களாக ஆட்டுமந்தையை நடத்தி செல்லும் நல்ல மேய்ப்பன், பிரதான மேய்ப்பன் அவர். அநேக வேளையில் மாநகரங்களில் அரசியல் தலைவர்கள் செல்லும்போது அனைத்து வாகனங்கள் போவது நிறுத்தப்பட்டு தலைவர்களின் வாகனங்கள் முன்னும், பின்னும் விலையேறப்பெற்ற பாதுகாவலர்களின் பாதுகாப்புடன் செல்லும். அதுபோல தான் நம்முடைய தேவன் தம்முடைய ஜனங்களுக்கு முன்பாக செல்லுவார். முழு இஸ்ரவேல் ஜனங்களை தேவன் அப்படிதான் நடத்தி சென்றார். **தம் தாசனாகிய மோசேயை பார்த்து என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் (யாத் 34 :14)** என்றார். யோசுவாவுக்கு தேவன் தந்த தீர்க்கதரிசன வார்த்தைகளை அவர் அப்படியே நிறைவேற்றினார். யோசுவா 3–ம் அதிகாரத்தை வாசித்து பாருங்கள்.

**இதோ, சர்வ பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறவருடைய உடன்படிக்கைப் பெட்டி உங்களுக்கு முன்னே யோர்தானிலே போகிறது. (யோசுவா 3 : 11)** யோர்தான் நதி தேவ ஜனங்களுக்கு குறுக்காக இருந்தபோது தேவனுடைய மகிமை விளங்கும் உடன்படிக்கை பெட்டி அதாவது தேவனே முன்பாக கடந்துசெல்கிறார். யோர்தானில் வெள்ளம் இருபுறமும் குவியலாய் நின்றது. தேவஜனங்கள் உலர்ந்த தரைவழியாக கடந்து போகிறார்கள். அடுத்ததாக எரிகோ கோட்டை முன்பாக யோசுவாவும் தேவ ஜனங்களும் நிற்கிறார்கள். எரிகோவை பிடிக்க முடியாதபடி வாக்குத்தத்த கானான் தேசத்தில் நுழையவிடாதபடி கோட்டை நிற்பதை கண்டார்கள். **எரிகோ இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது; ஒருவரும் வெளியே போகவுமில்லை, ஒருவரும் உள்ளே வரவுமில்லை. (யோசுவா 6 : 1)** ஆனால் அங்கும் தேவன் சொல்லியபடி **அந்தப்படியே நூனின் குமாரனாகிய யோசுவா ஆசாரியரை அழைத்து: உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக்கொண்டு போங்கள். (யோசு 6 : 6)** தேவனுடைய மகிமை முன்பாக சென்றது. எக்காளங்களை ஊதுகையில் ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்; எக்காள சத்தத்தை ஜனங்கள் கேட்டு, மகா ஆரவாரத்தோடே முழங்குகையில், அலங்கம் இடிந்துவிழுந்தது. (யோசு 6 : 20)

தேவன் தாம் சொன்னபடியே முன்பாக சென்றார். 2009–ம் ஆண்டு திரும்பி பார்க்கும்போது ஒவ்வொரு கூட்டங்கள், முகாம்கள், திட்டங்கள் எல்லாம் நிறைவேற்ற கர்த்தர்தாமே முன்பாக சென்றதை நாங்கள் அனுபவிக்க முடிந்தது. எனக்கன்பானவர்களே இந்த வருடத்தில் தாமே கர்த்தர் உங்களுக்கு முன்பாக செல்வார். வாழ்க்கைப் பாதையில், ஊழியப் பாதையில், உங்கள் பணி மற்றும் தொழில் எல்லாவற்றிலும் தடைகளை நீக்குவாராக. அவர்தாமே உங்களுக்கு முன்பாக செல்வார். இதை வாசிக்கும்போதே உங்கள் முன்பாக காணப்படும் யோர்தான் நதிகள், எரிகோ கோட்டைகளை உடைத்து தேவன்தாமே வழிகளை உண்டுபண்ணுவார். உங்களை நடத்தி செல்வார்.

## 2. அவர் உன்னோடே கூட இருப்பார் :–

**அவர் உன்னேடாடே கூட இருப்பார். அவர் உன்னைவிட்டு விலகுவதுமில்லை.** (உபா. 31:8) இந்த வாக்குத்தத்த வார்த்தை மோசே யோசுவாவுக்கு கூறி பெலப்படுத்தினார். மோசே மரித்தபின்பு யோசுவாவுடன் தேவனே பேசும்போது இதே வார்த்தைகளை கூறி பெலப்படுத்தினார். **நீ உயிரோடிக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. (யோசு1:5)**

கர்த்தர் நம்மோடு கூட இருப்பது எத்தனை பெரிய ஆசீர்வாதம் என்று வேதம் சொல்லுகிறது. தேவன் ஈசாக்கோடு கூட இருந்து அவனை ஆசீர்வதித்தார். **ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான். (ஆதி.26 : 12)** ஆதியாகமம் 39–ம் அதிகாரத்தை வாசித்துப்பாருங்கள். 4 முறை **கர்த்தர் யோசேப்போடு கூட இருந்தார்** என்று எழுதப்பட்டுள்ளது. அவன் அடிமையாக விற்கப்பட்ட இடத்திலும்; தேவன் அவனோடு கூட இருந்தபடியால் போத்திபார் ஆசீர்வதிக்கப்பட்டான். சிறைச்சாலை தலைவன் கண்களில் யோசேப்புக்கு தயவு கிடைத்தது.

தாவீதின் வாழ்க்கையிலும் II சாமுவேல் 5 :10–யை வாசித்து பாருங்கள். **தாவீது நாளுக்குநாள் விருத்தியடைந்தான்; சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார்.** பக்தன் தாவீதின் வழ்க்கையில் பல நெருக்கங்கள், கஷ்டங்கள் மத்தியிலும் தேவனுடைய அபிஷேகமும், அவனோடு கூட கர்த்தர் இருந்தபடியால் ஏற்ற காலத்தில் நாளுக்கு நாள் விருத்தியடைந்தான் என்று பார்க்கிறோம். யோசுவாவின் சரித்திரத்தையும் பாருங்கள். **"இவ்விதமாய் கர்த்தர் யோசுவாவோடேகூட இருந்தார்; அவன் கீர்த்தி தேசமெங்கும் பரம்பிற்று". (யோசுவா 6: 27)** வாக்குதத்தம் பண்ணின கர்த்தர் யோசுவாவுடன் இருந்தார். அவன் கீர்த்தி தேசமெங்கும் பரவிற்று. யோசுவா நினைத்திருக்கலாம். 40 வருடங்கள் மோசே கூட இருந்தோம். அனைத்து காரியங்கள் திறம்பட நடத்தினோம், தைரியமாக இருந்தது. ஆனால் மோசே இப்போது கடந்து போய்விட்டார். சில கால கட்டங்களில் மோசேக்கு விரோதமாக எவ்வளவுபேர் எதிர்த்தார்கள், கல் எறிந்தார்கள், தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளாதபடி பிரிந்தார்கள். மனம் சோர்ந்து போக வைத்தார்கள். இவ்வாறு என் அன்பான தலைவன் மோசே உடன் இல்லையே என்று அங்கலாய்த்தார்கள். ஆனால் பாருங்கள் யோசுவா 1 : 5–ல் "நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன் நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை." என்று கர்த்தர் சொன்னார். மோசே இருந்த இடத்தில் இனி மனிதன் அல்ல நானே உன்னோடு கூட இருப்பேன் எவ்வளவு பெரிய வாக்குத்தத்தம்! நம்பிக்கை! மோசேயுடன் இருந்து எப்படி நடத்தினாரோ அதேபோல் அதைவிட மேலாக கர்த்தரே உன்கூட இருந்து யோசுவாவை வழிநடத்தி தேசத்தை சுதந்தரிக்கச் செய்தார். அதே ஆண்டவர் நம்மை பார்த்தும் சொல்லுகிறார். நானே உன்னோடுகூட இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன். உயர்த்துவேன். காத்து வழிநடத்துவேன். நம்பிக்கை தரும் தேவனுடைய வாக்குத்தத்திற்காக தேவனைத் துதிப்போம்.

### 3. நீ பயப்படவும், கலங்கவும் வேண்டாம் :-

கடைசியாக தேவன் மோசே மூலமாக யோசுவாவுக்கு கொடுத்த வாக்குத்தத்த வார்த்தை நீ பயப்படவும், கலங்கவும் வேண்டாம். எதிர்காலத்தை குறித்த பயம். தேவைகளை குறித்த கலக்கம். சுற்றிலுமுள்ள எதிராளிகளை குறித்த பயம். எப்படி வழிநடத்துவோம் என்ற கலக்கம். தேவன் யோசுவாவை பார்த்து சொன்னார். நீ பயப்படவும், கலங்கவும் வேண்டாம். அதற்கு ஒரு முற்றுப்புள்ளியை தேவன் வைத்தார்.

உபாகமம் 34 : 9–யை வாசித்து பாருங்கள். **மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கைகளை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்;** இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். தேவன் யோசுவாவை ஞானத்தின் ஆவியால் நிரப்பினார். ஒரு விசேஷித்த அபிஷேகத்தை தேவன் யோசுவாவின் மீது ஊற்றினார். அத்தனை கலக்கம், பயம் எல்லாம் நீங்கியது. இயேசுவின் சீஷர்கள் சுமார் 120 பேர்கள் தங்கள் அறையை பூட்டி பயந்து இருந்தார்கள். இயேசுதாமே அவர்கள் நடுவில் வந்து உங்களுக்கு சமாதானம் என்று கூறினார். மட்டுமல்லாமல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவர் பெந்தேகோஸ்தே நாளில் ஊற்றப்பட்டார். அவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு சாட்சிகளாக பரிபூரண கிருபை பெற்றவர்களாக இயேசுகிறிஸ்தவின் இறுதி கட்டளையை நிறைவேற்றுகிறவர்களாக வல்லமையின் அபிஷேகத்தை பெற்று விளங்கினார்கள்.

இந்த கடைசிகாலம் பொல்லாத நாட்களாக உள்ளது. இயற்கை சூழ்நிலைகளின் மாற்றம், நோய்களின் கொடுரத்தினால் உண்டாகும் மரணபயம், பிள்ளைகளை குறிப்பாக படிப்பு, உயர்கல்வி, வேலைவாய்ப்புகள், திருமணம் இவைகளை குறித்த பயம், கலக்கம் நமக்கு வருவதுண்டு. மட்டுமல்லாமல் ஆவிக்குரிய வறட்சியின் நிமித்தம் சோர்வுகள், ஜெபவாழ்வில், வேதவாசிப்பில் பின்னடைந்திருக்கலாம். இந்த நாளில் தேவன் நமக்கு ஞானத்தின் ஆவியினால் நம்மை நிரப்ப விரும்புகிறார். முழங்காலில் நின்று யோசுவாவின் மீது மோசேயின் கரம் இருந்ததை போல் என் மீது உம் கரம் வைத்து என்னை உயிர்ப்பியும், அபிஷேகியும் என்று கதறுவோமாக. தேவன் இந்தவருடம் புதிய அபிஷேகத்தினால், புது கிருபையால், புதிய தரிசனங்களால் உங்கள் நிரப்புவார். நாம் ஒன்றைக் குறித்து; கலக்கமோ, பயமோ இல்லாதவர்களாய் கடந்து செல்வோம். **Because I know, He who hold my future** என்று பாடி முன் செல்லுவோம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

# ஜெபக்குறிப்புகள்

**பீல் மக்கள்**

✞ பீல் ஆதிவாசி மக்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Sharing Love Mission**

✞ ஷாலோம் மிஷனெரி பணி மூலமாக எழுப்பப்பட்டுள்ள 435 சுதேச ஊழியர்களுக்காகவும், அவர்களின் பரிசுத்த வாழ்க்கைக்காகவும் ஜெபியுங்கள்.

✞ 2010–ம் வருடத்தின் திட்டங்கள் நிறைவேற்றப்படும்படியாக ஜெபியுங்கள்.

✞ பிப்ரவரி மாதத்தில் நடைபெறும் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Shalom Diocese in India**

✞ ஷாலோம் பேராயத்திற்காகவும், 77 மூத்த ஊழியர்களுக்காகவும், அந்த சபைகளுக்காகவும் பாரத்தோடு ஜெபியுங்கள்.

✞ சபை மூப்பர்கள், விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

**Shalom Charity Mission**

✞ ஷாலோம் ஊழியத்தின் மூலமாக நடைபெறும் சமுதாய நலத்திட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

✞ நமது பீல் ஆதிவாசி சிறு பிள்ளைகள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியாக ஜெபியுங்கள்.

✞ நமது ஷாலோம் விடுதியில் படித்துவரும் ஆதிவாசி பிள்ளைகளுக்காகவும், அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் ஜெபியுங்கள்.

**அலுவலக ஊழியங்கள்**

✞ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகத்தில் நடைபெறும் ஊழியங்கள் ஆசீர்வதிக்கப்பட ஜெபியுங்கள்.

✞ அலுவலக ஊழியர்களுக்கு தேவன் ஞானத்தையும், சுகத்தையும் கொடுக்கும்படியாக ஜெபியுங்கள்.

**ஊழியத் தேவைகள்**

✞ இந்த பிப்ரவரி மாதத்திற்கான தேவைகள் எல்லாம் சந்திக்கப்படும்படியாக ஜெபியுங்கள். மாதந்தோறும் ரூ.500/– கொடுக்கக்கூடிய 1000 கிராம ஆதரவாளர்கள் கிடைக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

**உபவாச ஜெபம்**

✞ நமது பணித்தளங்களில் நமது ஊழியர்கள், விசுவாசிகள், மூப்பர்கள் மற்றும் பெண்கள் பிப்ரவரி 23ம் தேதியிலிருந்து எப்ரல் 3 வரை 40 நாட்கள் சிறப்பு உபவாச ஜெபங்கள் முழு பீல் மக்களின் இரட்சிப்பிற்காக ஏறெடுக்கிறார்கள். ஜெபத்திற்கு எதிராக செயல்படும் அந்தகார வல்லமைகள் நிர்மூலமாக ஜெபியுங்கள்.

## 2009-ம் ஆண்டில் பணித்தளத்தில் தேவன் செய்த மகிமையான காரியங்களில் ஒரு சில....

**"சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்"** (ஏசாயா 60:22) என்ற வாக்குத்தத்தத்தோடு 2009 புதிய வருடத்தை காண கிருபை செய்தார். 2009–ல் நுழையும்போதே மிகுந்த எதிர்ப்பு, போராட்டத்தோடே நுழைந்து எப்படி இருக்குமோ என்ற கேள்வியோடு ஊழியங்கள் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தேவன் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்தார். அவருக்கே மகிமையுண்டாவதாக. பணித்தளத்தில் தேவன் செய்த காரியங்கள் ஏராளம். அவற்றில் சில காரியங்களை பகிர்ந்து கொள்ளுகிறோம்.

### சுதேச ஊழியர்களின் மாதக் கூடுகை

ஒவ்வொரு மாதமும் **435 சுதேச ஊழியர்களுக்கும்** விசேஷ கூடுகைகள் குஜராத் மத்தியபிரதேசம், இராஜஸ்தான் (1&2) என்று **ஒவ்வொரு மாதமும் 4 இடங்களில்** இந்தக் கூடுகைகளை சிறப்பாக நடத்த தேவன் கிருபை தந்தார். இந்தக் கூடுகைகள் மூலம் சுதேச ஊழியர்கள் தேவனை ஆராதித்து, வசனத்தினால் ஸ்திரப்படுத்தப்பட்டு, தேவன் தந்த தரிசன பணியோடு மிகவும் பெலப்பட்டு உற்சாகமாய் திட்டங்களுடன் செயல்படும் கிருபையை பெற்றார்கள்.

### மூத்த தலைவர்கள் கூடுகை

மூன்று இராஜ்யத்திலிருந்தும் சுமார் **60 மூத்த சுதேச ஊழியர்கள்** ஒன்று கூடி கலந்து ஆலோசித்து ஜெபித்து செயல்படும் திட்டங்களை வகுத்து முன்னேறும்படியான கிருபையை தேவன் கொடுத்தார். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை இந்த கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூடுகைகளின் மூலமாக ஜெபம், மற்றும் அந்தந்த பகுதிகளில் உள்ள பிரச்சனைகளை ஜெபித்து நிவிர்த்தி செய்யவும், வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடவும் தேவன் கிருபை தந்தார்.

### மூத்த சுதேச ஊழியர்களின் மனைவிமார்களின் கூடுகை

மூத்த சுதேச ஊழியர்கள் **100 பேருடைய மனைவிமார்களுக்கென்று** சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமையில் விசேஷித்த கூட்டம் **ஒவ்வொரு மாதமும் 1–ம் தேதி** தவறாமல் நடைபெற்றது. பெண்கள் மிகவும் ஆவலுடன் உபவாசத்தோடு மாதத்தின் முதல் நாள் தேவனுடைய துதி ஸ்தோத்திரங்களையும் வருகிற புதிய மாதத்திற்கான ஊழியங்களுக்காகவும் தேவனுடைய பாதம் அமர்ந்திருந்து கிருபையை பெற்றார்கள். இதில் வல்லமையாய் தேவ தரிசனங்களையும் கண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

### சுதேச ஊழியர் மனைவிமார்களின் எழுப்புதல் கூடுகை

சுதேச ஊழியர் மனைவிமார்கள் பணித்தளங்களை **12 இடங்களாகப்** பிரித்து ஆங்காங்கே விசேஷித்த எழுப்புதல் கூட்டங்களை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தலைமையில் நடத்தினார்கள். ஊழியக்காரிகள் யாவரும் அபிஷேகத்தில் நிறைந்து உற்சாகமாய் சபைகளில் ஊழியம் செய்யும் கிருபையை பெற்றார்கள். மட்டுமல்லாமல் 2, 2 சகோதரிகளாய் 38 குழுக்களாய் பிரித்து 520 சபைகளிலும் பெண்களுக்கான எழுப்புதல் கூட்டங்களை நடத்தினார்கள். படிக்காத சுதேச ஊழியர் மனைவிமார்கள் கடந்த ஆண்டு செய்தி கொடுக்கக்கூடிய அளவு முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

### சுதேச ஊழியர் மனைவிமார்களின் மூலமாக மன்றாட்டு ஜெபக்கூடுகை

ஒவ்வொரு மாதமும் **24 பணித்தளங்களில்** பிராந்தியங்களாக பிரித்து மூத்த சுதேச

ஊழியர்களின் மனைவிமார்கள் மன்றாட்டு ஜெபக்கூட்டங்களை நடத்துகிறார்கள். இதில் விசேஷமாய் பீல் மக்களின் இரட்சிப்பிற்காக அழுதுபோராடி ஜெபித்து வருகிறார்கள். இதன் மூலமாக தேவன் அநேகருக்கு விடுதலையையும், அபிஷேகத்தையும் தந்தார். குறிப்பாக அந்தந்த பிராந்தியங்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட தேவன் கிருபை செய்துள்ளார்.

## சிறப்பு எழுப்புதல் முகாம்கள்

**மூப்பர்களுக்கான தரிசன முகாம்**

கடந்த வருடத்தில் சுமார் **3,850 பேர்கள்** மூன்று இராஜ்யத்திலும் ஒவ்வொரு சபைகளிலும் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **(ஏழு ஏழு பேர்களாக)** விசேஷித்த முகாம்கள் தாகோத் நமது Training Centre–ல் வைத்து நடத்தப்பட்டது. **மொத்தம் 19 முகாம்கள்** நடத்த தேவன் கிருபை செய்தார். மூப்பர்கள் அபிஷேகத்தையும், சபையைக் குறித்ததான எல்லா ஒழுங்கு முறைகளையும் மூப்பர்களுக்கான பொறுப்புகளையும் அறிந்து அதன்படி செயல்பட்டு வருகிறார்கள்.

**மூப்பர்களின் மனைவிமார்களுக்கான எழுப்புதல் முகாம்**

மூப்பர்களின் மனைவிமார்களுக்கென்று **5 முகாம்கள்** நடத்தப்பட்டது. குஜராத், மத்தியபிரதேசம், பெண்களுக்கு நடத்தப்பட்டது. இதில் பெண்கள் புதிய அபிஷேகத்தையும், சுகத்தையும், அற்புதங்களையும் பெற்றார்கள். ஜெப விண்ணப்பத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டார்கள்.

**வாலிபர்களுக்கான இரட்சிப்பின் முகாம்**

கடந்த ஆண்டு இராஜஸ்தானில் உள்ள வாலிபர்களுக்கு ஆண் பிள்ளைகள், பெண் பிள்ளைகள் தனித்தனியே **6 விசேஷித்த முகாம்கள்** நடத்தப்பட்டது. சுமார் **700 வாலிபர்கள்** பங்குபெற்றார்கள். விசேஷித்த பாடல்கள், Action Songs, Group Discussion, Message மற்றும் சிறு நாடகம் Bible Quiz நடத்தப்பட்டு பரிசு வழங்கப்பட்டது.

**சிறுவர்களுக்கான மனமகிழ்ச்சியின் முகாம்**

நமது Hostel–ல் உள்ள பிள்ளைகள் மற்றும் CDC Children, Hirola மற்றும் ஜெரியில் உள்ள பிள்ளைகளுக்கும் Bijalpur(Raj) School பிள்ளைகளுக்கும் **3 முகாம்கள்** நடத்த கிருபை செய்தார். CDC–ல் உள்ள புற இன பிள்ளைகளும் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். நமது பிள்ளைகள் அபிஷேகம் பெற்றார்கள். இவர்களுக்கும் சிறப்பாக நடத்தப்பட்டது. 10 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்று குழுவாக பிரித்து இரட்சிப்பை குறித்து தெளிவாக சொல்லிக் கொடுக்கப்பட்டது. சுமார் **400 பிள்ளைகள்** இந்த முகாமின் மூலம் சந்திக்கப்பட்டார்கள். இவர்களுக்கு Bible Quiz நடத்தப்பட்டது. நல்ல உணவு கொடுக்கப்பட்டது.

மேற்கண்ட முகாம்களை மிக திறம்பட அபிஷேகத்தில் நிறைந்தவர்களாய் நடத்துவதற்கு தேவன் நம்முடைய Training Unit –ல் தேவன் கொடுத்துள்ள **Mr. Bhavsingh Kattara, B.Th., Mr. Anil Chowhan, B.Th., Mr. Jainusingh, B.Th., Mr. Vikas Garasia, B.Th.,** ஆகியோரின் குடும்பங்கள் மற்றும் குழுவாக செயல்படும் **ஆறு சகோதரிகளுக்காகவும்** தேவனைத் துதிக்கிறோம்.

**சுதேச ஊழியர்களின் குடும்ப முகாம் – 2009**

கடந்த வருடமும் நம்முடைய **435 சுதேச ஊழியர்களின் குடும்பத்திற்கு** சிறப்பு குடும்ப முகாம் கடந்த நவம்பர் மாதம் குஜராத், ஆனந்த் பட்டணத்தில் Beracha Centre–ல் வைத்து நவம்பர் 3ம் தேதி முதல் 6ம் தேதி வரை சிறப்பாய் நடைபெற்றது. **Pas. Wilson George** (Chandigarh) மற்றும் **Pas. Daniel** (New Life Fellowship, Mumbai) ஆகியோரும் குழுவாக

வந்து துதி ஆராதனையை நடத்தி மிகவும் உற்சாகமாய் நடத்திக் கொடுத்தார்கள். பரலோகமே இறங்கி வந்ததுபோல இருந்தது. இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தில் இருந்து **Bro. Appadurai, Bro. Jeyakumar, Bro. Sam** ஆகியோர் குழுவாக வந்து தேவனுடைய செய்திகளை வல்லமையாக பகிர்ந்து கொடுத்தார்கள். மேலும் **Pr. Johnraj** (Karmal Church, Sivakasi) அவர்கள் போதகர்களுக்கான சிறப்பு வல்லமையான செய்திகளை பகிர்ந்து கொண்டார்கள். குறிப்பாக அனைத்து ஊழியர்களும் இணைந்து சுதேச ஊழியர்களின் குடும்பங்களுக்காக ஜெபித்தபோது அபிஷேகத்தின் வல்லமை அக்கினியாக இறங்கி வந்தது. அனைத்து சுதேச ஊழியர்களுக்கும் சிறப்பான வேத புத்தகங்கள் வழங்கப்பட்டது. இந்த முகாமிற்காக தேவைகளுக்காக இயேசு விடுவிக்கிறார் மூலமாக **ரூ. 4 இலட்சங்கள்** வழங்கப்பட்டது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

## சிறப்பு பயிற்சி முகாம்கள்

### புதிய ஊழியர்களுக்கான பயிற்சி

கடந்த ஆண்டில் **40 புதிய ஊழியர்கள்** புதிய கிராமங்களில் தெரிந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு முதலாவதாக மூன்று நாட்கள் ஆரம்பப் பயிற்சியாக விடுதலை முகாம் மற்றும் தரிசன முகாம் நடத்தப்பட்டது. அதன்பின் தெரிந்தெடுக்கப்பட்ட ஊழியர்களுக்கு ஒரு மாதம் சிறப்பு வேதாகமம் மற்றும் ஊழியம் செய்வதற்கான சிறப்பு பயிற்சி நடத்தப்பட்டது. மிகவும் சிறந்த முறையில் இந்த ஒரு மாத பயிற்சியை முடித்து தரிசனத்துடனும், அபிஷேகத்துடனும், வைராக்கியத்துடனும் ஊழியம் செய்து வருகிறார்கள்.

### CBC (VBS) பயிற்சி

ஏப்ரல் மாதத்தில் CBC Training **435 ஊழியர்களுக்கும்** மற்றும் சபையிலுள்ள ஞாயிறுப்பள்ளி ஆசிரியர்களுக்கும் நடத்தப்பட்டது. **4 குழுவாக பிரித்து 8 நாட்கள்** பயிற்சி கொடுக்கப்பட்டது. நம்முடைய சுதேச ஊழியர்கள் மற்றும் Training Unit ஊழியர்கள் மூலமாக ஆவியானவரின் ஒத்தாசையுடன், பாடல்களுக்கான Cassettee, CD மற்றும் பயிற்சி புத்தகங்கள் தயார் செய்து கொடுக்கப்பட்டது. மேலும் மனப்பாட வசனங்கள், Action Songs, நாடகங்கள் மற்றும் சித்திரபாடங்கள், Charts தயாரித்தல் முதற்கொண்டு அனைத்து காரியங்களுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டது.

2009–ம் ஆண்டில் CBC (VBS) –ற்கான **17,000 புத்தகங்கள்** (Children Book) மற்றும் **1500 Teacher Guide** நாம் அச்சிட்டுக் கொடுக்க தேவன் கிருபை தந்தார். கிராமங்களில் உள்ள மற்ற புற இன பிள்ளைகளும் பங்கு பெற்றார்கள். சுமார் **20,000 ஆதிவாசி பிள்ளைகள்** BC (VBS) –முலமாக தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள். சபையில் மூப்பர்கள் அதில் உற்சாகம் காட்டி CBC படிக்கிற பிள்ளைகளுக்கு தினமும் டிபன் மற்றும் குளிர்பானங்கள் உணவு கொடுத்து உற்சாகப்படுத்தினார்கள். Final Day Programme மிகவும் உற்சாகமாய் சபையில் நடத்தப்பட்டது. சிறுவர்கள் மத்தியில் ஒரு எழுப்புதலை காண முடிந்தது. இந்தத் திட்டத்திற்காக சுமார் 3.5 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

### போதர்களுக்கான சிறப்பு பயிற்சி முகாம்

2009ம் ஆண்டு மூத்த சுதேச ஊழியர்களுக்கு கடந்த ஆண்டு போதகர் Ordination கொடுக்க இருந்து **100 Pastor–களையும் குடும்பமாக** அழைத்து சபையைக் குறித்து Training கொடுக்கப்பட்டது. மிகுந்த ஜெபத்துடனும், உற்சாகத்துடனும் Pastor–கள் ஆயத்தமானார்கள்.

### Bild Leaders Training

சகோ. Dr. எமில் ஜெபசிங் அவர்கள் மூலமாக Bild Leaders Training அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் T-1, to T-5 Level – ல் சபை வளர்ச்சிக்கான பயிற்சி

கொடுக்க Master Training கடந்த ஆண்டு மெகமதாபாத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. இந்த Training –க்கு பின்பு சபைகளில் சென்று சபையின் மூப்பர்களுக்கு இவர்கள் நடத்தி சபையின் மூப்பர்களையெல்லாம் பெலப்படுத்தினார்கள். மூப்பர்கள் மூலமாக விசுவாசிகள் ஸ்திரப்படுத்தப்பட்டார்கள், இதன்மூலம் சபை மிகவும் வளர்ச்சி பெற்றது.

**B.Th படிப்பு**

நமது சுதேச ஊழியர்களில் **90 பேர் B.Th** வேதாகம படிப்பை **அலகாபாத் வேதாகம கல்லூரி** மூலமாக ஹிந்தி மொழியில் தொலை தொடர் கல்வி மூலமாக படித்து வருகிறார்கள். கடந்த வருடமும் வெற்றிகரமாய் 2 Semsters எழுத தேவன் கிருபை செய்தார். நம்முடைய ஷாலோம் பயிற்சி குழுவின் மூலமாக சிறப்பான பயிற்சிகள் கொடுக்கப்படுகிறது. இன்னும் 1 Semester பிப்ரவரியில் எழுதி B.Th படிப்பை முடிக்க உள்ளார்கள். கர்த்தருக்குச் சித்தமானால் இவர்கள் அனைவரும் **2010– ஏப்பரலில் B.Th பட்டம் பெற உள்ளார்கள்.** தேவனுக்கே மகிமையை செலுத்துவோம்.

## சிறப்பான உபவாச ஜெபங்கள்

**அந்நிய பாஷை ஜெபம்**

குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மூன்று மாநிலங்களிலும் மொத்தம் 5 குழு வைத்து மாதம் ஒரு முறை **3 மணி நேரம் Non Stop அந்நியபாஷை ஜெபம்** ஏறெடுக்கப்பட்டது. இதில் அநேகர் ஊழியங்களைக் குறித்த தரிசனங்களையும் காண்கிறார்கள். அல்லாமலும் ஊழியங்களுக்கும், ஊழியர்களுக்கும், சபைகளுக்கும் விரோதமாக எழும்பும் போராட்டங்கள் அந்தகாரத்தின் கிரியைகள் அனைத்தும் முறியடிக்கப்படுகிறது. ஊழியர்களுக்குள் ஒரு மனம் ஊற்றப்படுவதைக் காணமுடிகிறது.

**துதி ஆராதனை ஜெபம்**

முக்கியமான சுதேச ஊழியர் மனைவிமார்கள் சுமார் 60 பேர் இணைந்து 2 மாதத்திற்கு ஒரு முறை **5 மணி நேரம் Non Stop துதி ஆராதனை** நடத்தப்பட்டது. இதில் தலைமுறையாய் தொடர்ந்து வந்த கட்டுகள் முறிக்கப்பட்டது. பூரண விடுதலை அடைந்தார்கள். தேவனுக்கே மகிமை.

**முழு இரவு ஜெபம்**

**2 மாதத்திற்கு ஒருமுறை முழு இரவு ஜெபம்** நடத்தப்பட்டது. இதில் பெண்கள் 15 பேர் இணைந்து ஒரு மனதோடு பீல் மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபிக்கிறார்கள். மூன்று மாநிலங்களில் ஊழியங்கள் நடைபெறும் மாவட்டங்களில் உள்ள அனைத்து கிராமங்களின் பெயர்களையும் கூறி, அனைத்து சுதேச ஊழியர்களின் பெயர்களையும் கூறி கருத்தாய் ஜெபிக்கிறார்கள்.

**Chain Prayer**

ஒவ்வொரு நாளும் ஒரு சுதேச ஊழியர் குடும்பமாய் Dahod Traing Centre வந்து **365 Days Chain Prayer** செய்கிறார்கள். சுதேச ஊழியர் மனைவிமார்கள் ஒவ்வொரு வாரமும் (7 நாட்கள்) ஒவ்வொரு Area –ஆக பிரித்து Chain fasting prayer whole year நடத்தினார்கள்.

**உபவாச ஜெபங்கள்**

எல்லா புதன்கிழமை இரவு உபவாசித்து ஊழியர்களும், சபை மக்களும் தங்களுடைய பரிசுத்தத்திற்காகவும், குடும்ப ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிக்கிறார்கள். ஒவ்வொரு வெள்ளிக்கிழமை உபவாசித்து ஊழியத்திற்காகவும், சபைக்காகவும், பீல் மக்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபிக்கிறார்கள்.

குழுவாக ஜெபநடை **(Prayer Walk)**

சுதேச ஊழியர்களின் மனைவிமார்களுடன் சபையிலுள்ள மூப்பர்களின் மனைவிமார்களும் இணைந்து அநேக கிராமங்களில் ஸ்தோத்திர துதிகளுடன் அந்நிய பாஷையில் பேசி கிராமங்களைச் சுற்றி நடந்தே ஜெபித்து வருகிறார்கள். இதன் மூலம் கிராமங்களிலுள்ள அந்தகார வல்லமைகளும், அசுத்த ஆவிகளின் கிரியைகளும் அழிக்கப்பட்டு தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்படுகிறது. குறிப்பாக சில கிராமங்களில் சாராயம் காய்ச்சும் அனைத்து இடங்களும் மூடப்பட்டுள்ளன.

**Students Exam Prayer Meeting**

2009–ல் மார்ச் 1–ம் தேதி 10–ம் வகுப்பும் மற்றும் 12–ம் வகுப்பு பரீட்சை எழுதுகிற சபையின் பிள்ளைகளுக்கு விசேஷ ஜெபம் நடத்தப்பட்டது. மூன்று இராஜ்யத்திலும் இருந்து **235 பிள்ளைகள்** பங்குபெற்றார்கள். புற இன பிள்ளைகளும் பங்குபெற்று ஜெபித்தார்கள். ஜெபிக்க வந்த அனைவரும் வெற்றி பெறும்படியாகவும் மற்றும் அநேக பிள்ளைகள் **70% மேலாக** மார்க் எடுக்க தேவன் கிருபை செய்தார். பரீட்சையை குறித்த விழிப்புணர்வு ஜெபத்தின்மேல் விசுவாசம் வைக்கவும் கற்றுக்கொண்டார்கள்.

**40 Days Fasting Prayers**

சபையில் உபவாச ஜெபம் ஒழுங்காக விசுவாசிகள் செய்து வருகிறார்கள். மட்டுமல்லாமல் லெந்து நாட்களில் **40 நாட்கள்** சபையில் விசேஷமாய் **உபவாச ஜெபம்** செய்தார்கள். மற்றும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சபையில் Chain Prayer மிகவும் மிகவும் ஆசிர்வாதமாக நடத்தப்பட்டது.

**Bible Distribution**

**2009–ல் சுமார் 4200 வேதப்புத்தகங்கள்** விசுவாசிகளுக்கு மிகக் குறைந்த விலையில் கொடுக்கப்பட்டது. மக்கள் மிகுந்த உற்சாகமாய் வாங்கி படிக்கிறார்கள். குறிப்பாக அதிகமான அளவிற்கு வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக **Bible Society of India, Ahamadabad Branch** மூலமாக நம் ஊழியத்திற்கு சிறந்த **Award** கொடுக்கப்பட்டுள்ளது.

**Shalom Mission Sunday**

2009–ம் ஆண்டிலும் வழக்கம்போல **Shalom Mission Sunday** அக்டோபர் மாதம் நடைபெற்றது. விசுவாசிகள் மிகவும் உற்சாகமாய் கொண்டாடி கவர் காணிக்கை செலுத்தினார்கள். கடந்த ஆண்டில் சரியான மழைபெய்யவில்லை. வறட்சியான, பணப் பற்றாக்குறையான நாட்களிலும் கர்த்தருக்காக தேவன் தந்த பீல் மக்கள் தரிசன பணிக்காக தியாகத்துடன் கொடுத்த காணிக்கையில் ஊழியர்களும், மூப்பர்களும் உத்தம மனதோடு செலுத்தினார்கள். மொத்தம் **12 இலட்சத்து 80 ஆயிரம்** கிடைக்கப்பெற்றோம். விசேஷமாய் குஜராத் கங்கேலா திருச்சபையார் மட்டுமே **ரூ.1 இலட்சம்** கொடுத்தது மிகவும் குறிப்பிடத்தக்கது.

**Shalom Miracle Day**

ஒவ்வொரு வருடமும் **ஷாலோம் அற்புதத்தின் நாள்** என்று செப்டம்பர் மாதத்தின் 4ம் வெள்ளிக்கிழமையைக் குறித்து அந்த நாளில் எல்லா சபைகளிலும் ஒன்றுபோல **Healing Meeting** நடத்தி வருகிறோம். கடந்த வருடத்திலும் **டாக்டர். பால் தினகரன்** அவர்கள் ஜெபித்து 5 லிட்டர் ஜெப எண்ணெய் அனுப்பியிருந்தார்கள். செப்டம்பர் மாதம் 25–ம் தேதி வெள்ளிக்கிழமை அனைத்து சபைகளிலும் நடைபெற்ற இந்த **Miracle Day** கூட்டங்கள் மூலமாக **ஒரே நாளில் 4000–க்கு மேலானோர் அற்புத சுகம் பெற்று சாட்சி கொடுத்தார்கள்.** இந்த நாளில் சுமார் **500 புதிய குடும்பங்களை** தேவன் மந்தைக்குள் கொண்டு வந்தார். **தேவனுக்கே மகிமையுண்டாவதாக.**

## Church Construction Project

தேவ கிருபையினால் இதுவரை 520 கிராமங்களில் தேவ நாமம் மகிமைக்கென்று ஆராதனைகள் நடைபெற்று வருகிறது. 2009–ம் ஆண்டில் 24 கிராமங்களில் கிராம ஆலயங்கள் கட்டி முடிக்க தேவன் கிருபை தந்தார். குறிப்பாக இயேசு விடுவிக்கிறார் மூலமாக 10 இடங்களில் ரூ.2 இலட்சம் மதிப்புள்ள பெரிய ஆலயங்களை கட்டவும் தேவன் கிருபை செய்தார். இத்திட்டத்திற்காக **இயேசு விடுவிக்கிறார்** மூலமாக ரூ. 20 லட்சம் கிடைக்கப் பெற்றோம். **இயேசு விடுவிக்கிறார்** ஊழியங்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். **விசேஷமாக அநேக ஆண்டுகளாய் கட்டுவதற்கு தடையாய் இருந்த இடங்களிலும் கடந்த ஆண்டில் ஆலயங்கள் கட்ட தேவன் கிருபை செய்தார்.**

## Baptism Services

தேவ கிருபையால் 2009–ம் ஆண்டு சுமார் பத்தாயிரத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களில் சுமார் 4,200 பேருக்கு உரிய வேதாகம பயிற்சியும், சிறப்பு கூட்டங்களும் நடத்தப்பட்டு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

## Literature (இலக்கியம் மற்றும் புத்தகங்கள் பணி)

ஆவிக்குரிய புத்தகங்கள், Bible Cover, Scarb, Key Chain, Cross மற்றும் Stickers, வசனபோர்டுகள், CDS, VCD, X-mas things விநியோகிக்கப்பட்டது. விசேஷமாக பீல், பிலோடி, வாகுடி மூன்று கிராம பாஷைகளில் பாடல்கள் 3 CD வெளியிட தேவன் கிருபை செய்தார். இதில் நமது ஊழியர்களும், ஊழியக்காரிகளும் பாடல்கள் பாடியுள்ளார்கள். **Bible Society Sponsor** மூலமாக இந்த CD வெளிடப்பட்டது. மற்றும் CBC பாடல்கள் CD & Cassette வெளியிடவும், கிறிஸ்துமஸ் பாடல்கள் அமைந்த ( பீலி, பிலோடி, வாகுடி) CD & Cassette வெளியிடப்பட்டது.

## சமூக பொருளாதார முன்னேற்றம் மற்றும் கல்விப் பணிகள்

### மருத்துவ முகாம்

கடந்த ஆண்டு இரண்டு முறை Medical Camp நடத்தப்பட்டது. ஏப்ரல் மாதத்திலும், நவம்பர் மாதத்திலும் 10 நாட்கள் Medical Camp நடத்தப்பட்டது. இதில் 3,200 பேர்கள் சிகிச்சை பெற்றார்கள். **Dr.Abel & Dr. Jolly Abel, Dr. Inba Kumar from. Vellore, Dr. Jasmine** மற்றும் Nurses வந்து மிகவும் சிறப்பாய் நடத்தி **CBN** ஸ்தாபனத்தின் மூலம் **Lab Technician Bro. Bitchaiah** வந்து உதவி செய்து கொடுத்தார்கள். Operation செய்து விசுவாசி சிறுவனுக்கு bladder Stone எடுக்கப்பட்டது.

## Hand Pump Project

ஒவ்வொரு வருடமும் **CBN** ஸ்தாபனத்தின் மூலமாக நமது பணித்தளத்தில் உள்ள கிராமங்களில் அடிகுழாய் போட்டுக் கொடுக்கிறார்கள். இதன் மூலம் குடிநீர் வசதியை கிடைக்கபெறாத விசுவாசிகளுடைய கிராமங்கள் பயன்பெற்று வருகிறார்கள். கடந்த வருடமும் இராஜஸ்தான் பகுதியில் உள்ள **25 கிராமங்களில் 25 அடிகுழாய்கள்** போட்டுக்கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கிராமங்களிலும் அடிகுழாய் போடுவதற்கு முன்பாக பாரத்தோடு விசுவாசிகள் ஊழியர்கள் ஜெபிப்பதும், தண்ணீர் வந்தவுடன் அனைத்து கிராம மக்களும் தேவனைத் துதிப்பதும் தேவனுக்கு மகிமையாக இருந்தது.

## CBC Project

**Caruna Bal Vickas (Compassion)** மூலமாக நம் ஊழியத்திற்கு **3 Projects** கொடுக்கப்பட்டுள்ளது. **குஜராத்தில் ஹிரோலா கிராமத்தில் 235 பிள்ளைகளும், ஜெரி கிராமத்தில் 96 பிள்ளைகளும், மத்தியபிரதேசத்தில் அந்தர்வேலியாவில் 110**

**பிள்ளைகளும்** மொத்தம் **439** பிள்ளைகள் இத்திட்டத்தின் மூலமாய் தாங்கப்பட்டு வருகிறார்கள். இத்திட்டத்திற்கான அடிப்படை தேவை வசதிகளை நாம் செய்து கொடுத்து வருகிறோம்.

### Shalom School மற்றும் Hostel Project

**இராஜஸ்தான்** பிஜல்பூரில் Shalom Middle School Hindi Medium–த்தில் நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் 6–ம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு 295 பிள்ளைகள் படிக்கிறார்கள். மட்டுமல்லாமல் hostel சேர்ந்த நடத்தப்பட்டு வருகிறது. 7,8,9 படிக்கும் High School பிள்ளைகளுக்கும் விடுதி நடத்தப்பட்டு வருகிறது. மொத்தம் 340 மாணவர்கள் தங்கி கல்வி பயில்கிறார்கள்.

இராஜஸ்தானில் கோய்க்கா Shalom Hostel- ல் 31 பேர்கள் தங்கி படித்து வருகிறார்கள். குறிப்பாக தாய் அல்லது தந்தையரை இழந்த பிள்ளைகள் படித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**குஜராத்** I.P Mission Hostel-லும் Godhra Hostel- லும் 61 சிறுவர்கள், குஜராத் ஜெசவாடா விடுதியில் 22 சிறுவர்கள், **மத்தியபிரதேசம்** Gadwada Hostel-ல் 50 சிறுவர்கள் தங்கி படித்து வருகிறார்கள். மட்டுமல்லாமல் இன்னும் சுதேச ஊழியர்கள் பிள்ளைகளை கல்வி பயில நாம் தாங்கி வருகிறோம். இதில் **329 மாணவர்கள்** தாங்கப்பட்டு வருகிறார்கள். விசேஷமாய் நாம் தாங்கி வருகிற பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் எடுத்து வருகிறார்கள். இந்த ஆண்டு **Usha** என்ற மாணவி **Teacher Training** படிக்கிறாள். Sarmista என்ற மாணவி Polytechnic–ல் Computer Science படிக்கிறாள். மற்றும் பிரகாஷ், விஜய் என்ற மாணவர்கள் கல்லூரியில் படித்து வருகிறார்கள்.

**இதுவரை Compassion Project மூலமாக 439 பிள்ளைகளும், Shalom Charity Mission மூலமாக 821 பிள்ளைகளும் கல்விப்பணி மூலமாக தாங்கப்பட்டு வருகிறார்கள்.** கிறிஸ்துவுக்கென்று குறைந்தது **10000 ஆதிவாசி மாணவர்களை** உருவாக்கி சொந்த பீல் சமுதாயத்தில் முழு மாற்றத்தை கொண்டுவரவேண்டும் என்பது நமது இலக்காகும்.

### Shalom Diocese in India Inauguration & Bishop Consecration Cermony

நம் ஷாலோம் மிஷனெரி பணி மூலமாக எழுப்பப்பட்ட 500–க்கும் அதிகமான பீல் ஆதிவாசி திருச்சபைகளுக்காக தேவனைத் துதிப்போம். மட்டுமன்றி தேவன் கொடுத்த 435 பீல் சுதேச ஊழியர்களின் நற்செய்தி பணிக்காக அவர்கள் மூலமாக தேவன் திருச்சபையை கட்டி எழுப்புவதற்காக தேவனைத் துதிப்போம். இரண்டு வருடங்களாக பாரத்தோடு ஜெபித்து ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி தேவன் கொடுத்த சபைகளை, மூப்பர்களை, விசுவாசிகளை ஒருங்கிணைத்து **Shalom Diocese in India** என்ற பெயரில் திருமண்டலமாக **சபை ஊழியத்தை** நிறுவ தேவன் கிருபை தந்தார்.

**Shalom Diocese in India**–வின் ஸ்தாபகரும், முதல் பேராயருமாக **Rev. Dr. V. Devadass** அவர்கள் பேராயராக பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். **Most Rev.Dr. Duraisingh James, Most.Rev.Dr. John Sathiakumar, Rt.Rev.Dr. John S.D. Raju** அவர்கள் இந்த பிரதிஷ்டை வைபவங்களை சிறப்புடன் நடத்திக் கொடுத்தார்கள். தேவனுடைய மகிமையின் பிரசன்னம் இறங்கி வந்ததை ஒவ்வொருவரும் உணர்ந்தார்கள். கிறிஸ்துவின் மகிமைக்காக நடைபெற்ற இந்திய திருச்சபை வரலாற்றின் பொன்னாளான இந்த வைபவத்தில் நமது இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் **Prof. C.S. கிறிஸ்டோபர், Pr. ஞானசேகரன், Bro. J. அற்புதராஜ் மர்காஷிஸ்** மற்றும் **Bro. ஜெபஸ் அகஸ்டின்** அவர்கள் குடும்பமாகவும் கலந்து கொண்டனர். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

**Pastors Ordination Programme**

ஷாலோம் ஊழியம் ஆரம்பித்து 19 வருடங்கள் ஆகிறது. இந்த நாட்களில் உருவாக்கப்பட்ட சுதேச ஊழியர்களுக்கு தேவன் சபைகளையும், ஆத்துமாக்களையும் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். இவர்களில் **77 ஊழியர்களை** குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுத்து விசேஷ பயிற்சியும் கொடுத்து நவம்பர் 20–ம் தேதி அவர்களுக்கு "ஆனந்த்" பட்டிணத்தில் உள்ள Berakah Centre-ல் வைத்து Pastor Ordination கொடுக்கப்பட்டது. சபை மூப்பர்கள் மிகவும் உற்சாகமாய் வந்து பங்குபெற்று Pastors குடும்பத்தை மேள தாளங்களோடு தங்கள் தோளில் தூக்கிவைத்து நடனமாடி பரிசுகள் வழங்கி கொண்டாடினார்கள். இந்த பிரதிஷ்டை வைபவத்தில் சுமார் 3000 பேர் பங்கு பெற்றார்கள்.

## Christmas Children Programme

தாகோத்தில் உள்ள Shalom Training Centre-ல் 2009–ல் **டிசம்பர் மாதம் 20–ம்** தேதி சிறுவர்களுக்கென்று விசேஷித்த கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதில் குஜராத், மத்தியபிரதேசத்தில் நாம் தாங்கி வரும் ஷாலோம் விடுதியில் உள்ள பிள்ளைகள், ஷாலோம் ஊழியர்களின் பிள்ளைகளுமாக **300 பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்கும்** நல்ல பாடல்கள், நாடகங்கள், Dance, Memory Verse என்று மிகவும் சிறப்பான நிகழ்ச்சிகள் இயேசுவின் பிறப்பைக் குறித்த விசேஷ நாடகமும் நடத்தப்பட்டது. இறுதியாக அனைத்து பிள்ளைகளுக்கும் அறுசுவை உணவு வழங்கி **Christmas Gift ம்** வழங்கப்பட்டது.

இதேபோல் **டிசம்பர் 21–ம் தேதி** அன்று இராஜஸ்தானில் உள்ள Bijalpur School & Hostel பிள்ளைகள் மற்றும் இராஸ்தானில் உள்ள ஊழியர்கள் பிள்ளைகளுமாக **500 பிள்ளைகளுக்கும்** நல்ல பாடல்கள், நாடகங்கள், Dance, Memory verse என்று மிகவும் சிறப்பான நிகழ்ச்சிகள் இயேசுவின் பிறப்பைக் குறித்து விசேஷ நாடகமும் நடத்தப்பட்டது. இறுதியாக அனைத்து பிள்ளைகளுக்கும் அறுசுவை உணவு வழங்கி **Christmas Gift-ம்** வழங்கப்பட்டது.

**Christmas Children Programme for CDC Children**

டிசம்பர் 13–ம் தேதி நமது CDC Children -கென்று விசேஷித்த Programme Hirola–விலும், ஜெரி கிராமத்திலும், அந்தர்வேலியா கிராமத்திலும் தனித்தனியாய் அந்தந்த ஆலயத்தில் வைத்து நடத்தப்பட்டது. **433 பிள்ளைகளுக்கும்** புதிய ஆடைகள் மற்றும் பரிசு அளிக்கப்பட்டது. நல்ல உணவு மற்றும் இனிப்பு வழங்கப்பட்டது. பேராயர் V. Devadass அவர்கள் அந்தர்வேலியாவிற்கும், சகோதரி. வஹிதா தேவதாஸ் ஹிரோலாவிற்கும், சகோ. ஜெயராஜ் அவர்கள் ஜெரி கிராமத்திற்கும் சென்று சிறப்பு செய்தி கொடுத்து நடத்தி வந்தார்கள்.

**கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட்டங்கள்**

கடந்த கிறிஸ்துமஸ் மிகவும் உற்சாகமாய் எல்லா சபைகளிலும் கொண்டாடப்பட்டது. நாம் தாங்கிவரும் 435 சுதேச ஊழியர்களுக்கும் White Safari Dress ஊழியர்களின் மனைவிமார்கள் அனைவருக்கும் சேலையும் மற்றும் **சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் 1,250 பேருக்கும்** புத்தாடைகளும் வழங்கப்பட்டது. எல்லா சபைகளிலும் Carol Rounds

Group–ஆக சென்று வீடுகள் சந்தித்து பாடல்களை பாடி நடனம் ஆடி மிகவும் சிறப்பாய் கொண்டாடினார்கள். மற்ற புற இன நண்பர்கள் வீட்டிற்கும் சென்று கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை கூறி ஆசீர்வதித்து வந்தார்கள். சென்ற இடங்களில் எல்லாம் நல்ல வரவேற்பு கிடைக்கப்பெற்றார்கள். இதே போல் கிறிஸ்துமஸ் ஆராதனையும் மிகவும் சிறப்பாய் சபைகளில் கொண்டாடப்பட்டது. எந்தவித எதிர்ப்புகளும் இல்லாமல் மிகவும் உற்சாகமாய் கொண்டாடப்பட்டது. எல்லா வீடுகளிலும் ஸ்டார் தொங்கவிட்டு அலங்கரித்து புதிய உடைகளை அணிந்து ஆடுகளை அடித்து சாப்பாடு செய்து கொண்டாடினார்கள். குறிப்பாக கிறிஸ்தவரல்லாத சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு மேலானோர் சபைகளில் வந்து பங்கு பெற்று கிறிஸ்துவின் பிறப்பின் நற்செய்தியை அறிந்து கொண்டது மாபெரும் சந்தோஷமாகும். தேவன் தாமே எல்லாவற்றையும் செய்ய கிருபை செய்தார்.

**பணித்தள பார்வை**

கடந்த ஆண்டில் அநேக தேவ மனிதர்கள் நமது ஷாலோம் பணித்தளத்திற்கு வருகை தந்து, பணித்தளங்களை பார்வையிட்டு, தேவனுடைய ஊழியங்களை நிறைவேற்றி, நமது பணித்தளத்தில் நடைபெறும் ஊழியங்களுக்காக தேவனைத் துதித்து ஆத்தும பாரத்துடன் திரும்பினர்.

**தமிழக ஊழியங்கள்**

கடந்த ஆண்டில் தமிழகத்தில் பல இடங்களில் ஷாலோம் ஊழியங்களைக் கொண்டு கூட்டங்கள் நடத்தவும், பல மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகளை நடத்தவும் தேவன் கிருபை செய்துள்ளார். தேவனுக்கே மகிமை.

**தேவனுக்கே மகிமை**

மிகுந்த நிறைவுடன் எந்த குறைவுமில்லாமல் 2009–யை கடக்க கிருபை செய்தார். இந்த தரிசன மிஷனெரிப் பணியை நிறைவேற்றுவதற்கு திரியேக தேவன் கொடுத்த கிருபைக்காக தேவனைத் துதிக்கிறோம். மேலும் இந்த தரிசனப் பணியை எங்களுடன் இணைந்து செயல்படும் பீல் சுதேச ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள், விசுவாசிகள் யாவருக்காகவும் தேவனைத் துதிக்கிறோம். மேலும் **பணித்தள அலுவலக ஊழியர்கள், பயிற்சி குழு ஊழியர்கள், Project ஊழியர்கள், தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்கள், முன்னேற்றப்பணி ஊழியர்கள், ஷாலோம் பிரதிநிதிகள்,** ஊழியங்களைத் தியாகத்துடன் ஜெபித்து, ஆதரித்து வரும் சுவிஷேகர்கள், போதகர்கள், மற்றும் ஸ்தாபனங்கள், தொழில் செய்பவர்கள், மற்றம் பணி இதர பணி செய்பவர்கள் அனைவருக்காகவும் தேவனைத் துதித்து அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக **ஷாலோம் செயற்குழு உறுப்பினர்கள்** யாவருக்கும் குறிப்பாக எங்களையும் பீல் மக்களையும் அதிகம் நேசிக்கின்ற அன்பு **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களுக்காக இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காக தேவனைத் துதித்து அவர்களை நன்றியுடன் வாழ்த்துகிறோம்.

**என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு** என்ற வாக்குப்படி பெலன் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

***தேவனுக்கே மகிமை உண்டாவதாக!***

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



மாணவனின் பெயர் : **ஷெக்கினா டாமோர்**

தகப்பனார் பெயர் : ரமேஷ் K. டாமோர்

தாயார் பெயர் : பிஜ்ஜீ டாமோர்

பிறந்த நாள் : **05.01.2005**

படிக்கும் வகுப்பு : L.K.G.

சொந்த ஊரின் பெயர் : தோரனியா

மாவட்டம் : ஜாபுவா

மாநிலம் : மத்தியப்பிரதேசம்

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

ஷெக்கினாவின் தந்தை ரமேஷ் டாமோர் இயேசுவை அறியாத புறமதத்தைச் சார்ந்தவர். இவருடைய தாய்க்கு நோயினால் பாதிக்கப்பட்ட மிகவும் அவதிப்பட்டார். அதிக பணம் செலவு செய்தும் இவருடைய தாக்கு நோய் குணமாகவில்லை. பின்பு அமயம்மாள் என்றகிராமத்தில் நடைபெறும் ஆலய ஆராதனைக் குறித்து கேள்விப்பட்டு அங்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு ஊழியர் இவரது தாய்கக எண்ணெய் பூசி ஜெபித்தார். அதன்பின் சில நாட்களிலேயே இவரது தாய் பூரண சுகம் பெற்றார். இவரது குடும்பத்தில் தேவன் செய்த இந்த பெரிய அற்புதத்தின் நிமித்தம் இந்த குடும்பம் முழுவதும் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டது. பிறகு தேவனுடைய அழைப்பைப் பெற்ற சகோ. ரமேஷ் டாமோர் ஷாலோமில் இணைந்து குடும்பமாக தோரணியா கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** நன்றாக படிப்பாள்

**ஜெபியுங்கள்:-** இவள் நன்றாக படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், இவனுடைய குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுமியைத் தாங்குபவர் :** **Pudukottai Area Prayer Fellowship,** Thoothukudi Dist.

நீங்களும் மாதம் ரூ. 400/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்து தாங்க முன் வரலாம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.

# ஷாலோம் செயற்குழு கூட்டம் - 2010 (18.01.2010)



ஷாலோம் ஊழியங்களுக்கு ஆலோசனைகளை வழங்கும்
சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள்



பேராயர் வே. தேவதாஸ் அவர்கள் கலந்துரையாடல்



2009ம் ஆண்டு பணித்தள அறிக்கையை சமர்பிக்கும்
சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



ஆராதனையை நடத்தும் Pr. ஞானசேகரன் அவர்கள்



செயற்குழு கூட்டத்தை நடத்தித் தந்த
Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள்



நிதி அறிக்கை சமர்ப்பிக்கிறார் சகோ. B. அருள்ராஜ்



ஷாலோம் திருமண்டல ஆரம்ப விழா
வீடியோ படகாட்சியாக காண்பிக்கப்படுகிறது



பேராயர் வே. தேவதாஸ் அவர்கள் குடும்பத்திற்கு
விசேஷ ஜெபம்



**சகோ. மோகன் சி. லாசரஸ்** மற்றும் **பேராயர் வே. தேவதாஸ்** அவர்கள் குடும்பம்

அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார், அவர்களைப் பிரபுக்களோடு உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார். 1 சாமு. 2:8



**நமது ஷாலோம் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும்**

# ஷாலோம் செயற்குழு கூட்டம்

தேவகிருபையால் 18.01.2010 திங்கட்கிழமை அன்று நாலுமாவடி இயேசு விடுவிக்கிறார் வளாகத்தில் நமது ஊழியத்தின் செயற்குழு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இந்தக் கூடுகையை Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள் தலைமை தாங்கி நடத்த, ஆரம்ப ஜெபத்தை சகோ. ஜேக்கப் அவர்கள் ஏறெடுத்தார்கள். Pr. ஞானசேகரன் அவர்கள் பாடல்களை பாடி ஆராதித்தபோது தேவ பிரசன்னம் இறங்கி வந்தது. அனைவரும் ஆவியானவரின் நிறைவுடன் தங்களை அர்ப்பணித்தனர். தொடர்ந்து சகோ. J. அற்புதராஜ் மார்காஷிஸ் அவர்கள் கூடிவந்த அனைவரையும் வரவேற்றார்கள். சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள் 2009–ம் ஆண்டில் ஷாலோம் ஊழியத்தில் தேவன் செய்த மகத்தான கிரியைகளை விவரித்து கூறியது அனைவரையும் தேவனை துதிக்க செய்தது. கடந்த ஆண்டு (2008 –2009) நிதி அறிக்கையை சகோ. A. அருள்ராஜ் அவர்கள் சமர்பித்தார்கள்.

நமது அன்பு பேராயர் வே. தேவதாஸ் அவர்கள் 2010–ம் ஆண்டிற்கான ஊழிய திட்டங்கள், தேவைகள் மற்றும் முழு பீல் மக்களை சந்திக்க தேவன் தந்த பாரம் அனைத்தையும் அறிக்கை செய்தார்கள். குறிப்பாக ஷாலோம் திருமண்டல ஆரம்ப விழா, பேராயர் பிரதிஷ்டை மற்றும் 77 போதகர்களின் அபிஷேக ஆராதனை நிகழ்ச்சிகள் அனைத்தையும் 20 நிமிடம் வீடியோ மூலமாக காட்டப்பட்டது. இந்த வைபவங்களைக் குறித்து சகோ. ஜெபஸ் அகஸ்டின் அவர்கள் சாட்சி பகிர்ந்தார்கள்.

சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் மெய்யாகவே இது பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல் மூலமாக திருச்சபை பணி உருவாக்கப்பட்டது என்பதையும், "இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய்" என்ற வாக்குத்தத்தத்தின்படி விரைவில் ஷாலோம் திருமண்டல பணி மூன்று திருமண்டலங்களாக உருவாக்கப்பட உழைக்க வேண்டும் என்பதையும் அறிவித்தார்கள். பேராயர். வே. தேவதாஸ் மற்றும் அவரது துணைவியார் சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களுக்காகவும், ஷாலோம் திருமண்டல பணிக்காகவும் அனைவரும் ஜெபித்தபோது ஆவியானவர் தீர்க்கதரிசனமாக வல்லமையான காரியங்களை சகோதரர் மோகன் சி. லாசரஸ் மூலமாக வெளிப்படுத்தியதை கேட்டு அனைவரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

மேலும் 2010–2020 பரமதரிசன திட்டங்களுக்காக எப்படி செயல்படவேண்டும் என்பதை சகோ. சுந்தர்சிங் அவர்கள் விவரித்து கூறினார்கள். அதன்பின்பாக நிறைவேற்றப்படவேண்டிய காரியங்கள் அனைத்தும் கிரமமாக நிறைவேற்றப்பட்டது. இறுதியாக வந்த அனைவருக்கும் சகோ. ரோஷன் அவர்கள் நன்றி கூறினார்கள். மேலும் சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்கள் வந்திருந்த செயற்குழு உறுப்பினர்கள் அனைவரையும் ஆசீர்வதித்து ஜெபித்து, இறுதி ஜெபத்தையும் செய்து நிறைவு செய்தார்கள்.

**தேவனுக்கே மகிமையுண்டாவதாக! ஆமென்!**

## ஷாலோம் ஊழியங்களின் தரிசனம்

- 2020–ம் ஆண்டிற்குள் முழு பீல் மக்களும் சந்திக்கப்பட வேண்டும்.
- 7000 பீல் ஆதிவாசி கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும்.
- 7000 கிராமங்களில் சுதேச ஊழியர்களை எழுப்புதல்
- 7000 கிராமங்களில் 7000 சபைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

குஜராத் : தாகோத், பரோடா மாவட்டங்கள்..

மத்தியபிரதேசம் : ஜாபுவா, ரத்லம், தார், அலிராஜ்பூர், பட்வாணி மாவட்டங்கள்.

இராஜஸ்தான் : பான்ஸ்வாடா, உதய்பூர், டுங்கர்பூர், சித்தோட்கட், பிரதாப்கட் மாவட்டங்கள்.

## *2010-ல் அடையவிருக்கும் இலக்குகள்*

- 200 புதிய சுதேச ஊழியர்களை 200 கிராமங்களில் எழுப்புதல் 50 , 50 ஊழியர்களாக 4 Batches
- 1000 திருச்சபைகளை உருவாக்குவது (தற்போது 520 சபைகள்)
- 100 புதிய கிராம ஆலயங்களை கட்டுவது. ரூ.60,000/– மதிப்பில் (40) ரூ. 1 இலட்சம் மதிப்பில் (40) ரூ.2 இலட்சங்கள் மதிப்பில் (20)
- வேதாகம பயிற்சிகளும், ஷாலோம் வேதாகம பயிற்சி கூடமும் உருவாக்குதல்.

### *சிறப்பு வேதாகம பயிற்சிகள்*

- புது ஊழியர்களுக்கு 1 மாத பயிற்சி அளித்தல்
- ஒரு வருட வேதாகம கல்வி (தொலைதூர திட்டம் மற்றும் Resident)
- B.Th Correspondance Course (4 Year) Hindi Mediam
- தலைமைத்துவ பயிற்சி முகாம்கள்
- 10,000 மூப்பர்களுக்கு பயிற்சி முகாம்கள்
- 5000 வாலிபர்கள் மற்றும் சிறுவர்களுக்கு முகாம்கள்
- தலைமைத்துவ சிறப்பு பயிற்சியாளர்களுக்கான தலைமைத்துவ விசேஷ பயிற்சி.
- விசேஷித்த அபிஷேக முகாம்கள் மற்றும் அக்கினி அபிஷேக முகாம்கள்.
- சிறப்பு பெண்கள் எழுப்புதல் கூட்டங்கள்.
- விசேஷித்த ஜெபம், உபவாச கருத்தரங்குகள் மற்றும் செயல்படும் முகாம்கள்.

*ஆதிவாசி மாணவர் கல்விப்பணி*

- புதிதாக 500 ஆதிவாசி மாணவர்களை கல்வி புகட்டும் பணியில் இணைத்து முன்னேற வைத்தல்
- படிக்கும் வாலிப ஆண், பெண்களுக்கு ஜெபக் கூடுகைகள் நடத்தி, நல் ஆலோசனைகள் வழங்கி முடிந்த அளவு வசதிகளை ஏற்படுத்துதல்.
- 50 இடங்களில் CBN மூலமாக ஆழ்குழாய் குடிநீர் வசதி ஏற்படுத்துதல்
- 2010–ல் 2 மருத்துவமுகாம் மூலம் 10 கிராமங்களில் சுமார் 5000 பேர்களுக்கு மருத்துவ உதவி வழங்குதல். மேலும் 120 ஊழியர், ஊழியக்காரிகளுக்கு ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம்கள்.
- சுதேச ஊழியர்களின் குடும்ப எழுப்புதல் அக்கினி முகாம் அக்டோபர் 2010.
- பீலி, பிலோடி, வாகுடி மொழிகளில் பாடல்கள், செய்திகள் மொத்தம் 12 வெளியீடுகளை தயாரித்து வழங்குதல்.
- குறைந்தது 5000 புதிய விசுவாசிகளின் குடும்பங்களுக்கு வேதப்புத்தகங்களை மிகக் குறைந்த விலையில் வழங்குதல்

## *2010 திட்டங்களை நிறைவேற்ற தேவைகளும் உங்கள் பங்கும்*

- 200 சுதேச ஊழியர்களை ஜெபித்து தாங்கும் ஆதரவாளர்கள் **(மாதம் ரூ.2,000/–)**
- 500 ஆதிவாசி மாணவர்களை தாங்குவோர் **(மாதம் ரூ.500/–)**
- 300 சைக்கிள்கள் சுதேச ஊழியர்களின் பணிக்காக **(ஒரு சைக்கிள் ரூ.2,500/–)**
- 5000 வேத புத்தகங்கள் விசுவாச குடும்பங்களுக்கு மிக சொற்ப விலையில் வழங்குதல் **ஒரு வேத புத்தகத்தின் மதிப்பு ரூ.80**/-

*100 கிராம ஆலயங்கள் கட்டப்பட சிறப்பு நிதியாளர்கள்*

**40 ஆலயங்கள் (ரூ.60,000/– மதிப்பில்)**

**40 ஆலயங்கள் (ரூ.1,00,000/– மதிப்பில்)**

**20 ஆலயங்கள் (ரூ.2,00,000/– மதிப்பில்)**

***2010-ம் வருட ஊழிய திட்டங்கள், பயிற்சிகள் மற்றும் முன்னேற்ற திட்டங்கள் நிறைவேற்ற 1000 ஷாலோம் மிஷனெரி ஊழிய பங்காளர்கள் தேவை. (மாதம் ரூ.500/- கொடுத்து ஜெபித்து தாங்குவோர்)***

# ஷாலோம் தொலைநோக்கு தரிசன திட்டங்கள்

**குஜராத் பணித்தள அலுவலகத்திற்கு புதிய கட்டிடங்கள்**

- தற்போது உள்ள சிறிய கட்டிடம் 28 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டது. Diocese Office/ Training Unit/ Media Department/ Communication Department/ Finance Department/ Prayer Net work/ Project Department/ Administration Department அனைத்தும் திறம்பட செயல்படுவதற்கு புதிய கட்டிடம் எழும்பப்பட வேண்டும். தேவையான நிதி சுமார் ரூ.30,00,000/–
- குஜராத்தில் ஷாலோம் Bible Institute ஆரம்பிக்கப்பட நிலம் மற்றும் Training Centre, Hostel, Workers Home மற்றும் வசதிகள் கூடிய கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். குறைந்தது ரூ.50,00,000/– தேவைப்படுகிறது.
- மத்திய பிரதேசத்தில் அந்தர்வேலியா கிராமத்தில் வாங்கப்பட்டுள்ள இரண்டரை ஏக்கர் நிலத்தில் மத்திய பிரதேச ஊழியர் வளர்ச்சிக்காக Shalom Spiritual Life Centre / Training Programme மற்றும் முகாம்கள் நடத்தப்பட Compound Wall, கட்டிடங்கள் எழுப்பப்பட குறைந்தது ரூ.30,00,000/– தேவைப்படுகிறது.
- இராஜஸ்தானில் ஷாலோம் Middle School மற்றும் விடுதியில் சுமார் 400 பிள்ளைகளுக்கு ஆசீர்வாதமாக உள்ளது. இங்குள்ள நிலத்தில் நேர்த்தியான பள்ளிக்கூட கட்டிடங்கள் இல்லை.
- 1 முதல் 8 வகுப்புகள் மற்றும் பள்ளிக்கூட அலுவலக அறைகள் சேர்த்து 10 அறைகள் கட்டப்பட வேண்டும். குறைந்தது ரூ.20,0,000/– தேவைப்படுகிறது.

**அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும் (சங்கீதம் 33 : 9)**

***ஜெபிக்கும்படியாகவும், தாங்கும்படியாகவும்***
***அன்புடன் கேட்கிறோம்***

## ஷாலோம் கிளை அலுவலகங்கள்

| | |
|---|---|
| **சகோ. B. எபனேசர் டேனியல்,**<br>New No. 15, Old No. 59,<br>பஜனை கோயில் தெரு,<br>சூளைமேடு, சென்னை – 600–094<br>செல் : 093444–75468 | **சகோ. G. செல்வதுரை,**<br>M.T.N. பில்டிங்,<br>(மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, மார்த்தாண்டம்<br>கன்னியாகுமரி மாவட்டம்.<br>செல் : 094876–89869 |



# அழைப்பின் குரல் கேட்டேன்

சிறப்பு சாட்சி – **பேராயர் வே. தேவதாஸ்**

**"நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படுமுன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்"** GúW. 1:5

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

***2010 பிப்ரவரி 23ம் தேதி*** அன்று என்னுடைய வாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவு செய்ய தேவன் கிருபை செய்கிறார். அவருக்கே துதி, கனம், மகிமை செலுத்துகிறேன். எனக்கு ஜீவன் தந்து, இரட்சித்து அபிஷேகித்து ஊழிய அழைப்பைத் தந்து நல்ல இல்லற வாழ்வினைத் தந்து ஒரு ஜாதி (பீல்) மக்களுக்கு ஆசீர்வாதமாக உருவாக்கிய திரியேக தேவனுக்கு நன்றி செலுத்தி எனது வாழ்வில் இனிவரும் காலம் முழுவதும் அவருக்காக பணிபுரிய என்னை அர்ப்பணிக்கின்றேன்.

## பிறப்பும் அறிமுகமும்

குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படும் செல்வச் செழிப்பான சிவகாசி பட்டிணத்தில் 1960ஆம் ஆண்டு ***பிப்ரவரி 23ம் தேதி*** பக்தியுள்ள கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். என்னுடைய தாத்தா (அப்பாவின் அப்பா) திரு. ஜெபமணி அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே ராக்லாண்டு நினைவு ஆலயத்தைக் கட்டி எழுப்பவும், ஆலய ஊழியக் காரியங்களில் முன்னோடியாகவும் நின்றவர்கள். என் தகப்பனார் திரு. வேதமணி அவர்கள் சுகாதார ஆய்வாளராகப் பணியாற்றியும், ஆலய காரியங்களிலும்; குறிப்பாக பாடகர் குழு அமைத்து தேவனை மகிமைப்படுத்தியும் வந்தார்கள். என் தாய் வழியில் தாத்தா, பாட்டி திரு. ஜோசப் – திருமதி. அமுதா அவர்கள் இந்திய மிஷனெரி சங்கத்தில் (IMS) பளியர்கள் மத்தியில் பணியாற்றிய நற்செய்தி தொண்டர் மோசஸ் முத்துமாலை அவர்களைத் தொடர்ந்து பணியாற்றிய திருத்தொண்டர். என் தாயார் திருமதி. ஜாய் அவர்கள் தேவனுக்குப் பயந்து நடந்த ஆவிக்குரிய தாயார் மட்டுமின்றி, தயாள குணத்திற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த சாட்சிக்குரியவர்கள்

## இளமைப்பருவம்

நான், நல்ல குடும்பப் பின்னணியில் பிறந்தாலும் நான் பிறந்து 40 நாட்களில் என் தாயாரை தேவன் எடுத்துக் கொண்டார். அருமைத் தாயின் அன்பு முகம் கூட அறியாத துர்பாக்கியசாலியான நான் சிற்றன்னையின் வளர்ப்பில் வளர்ந்தேன். பிராயத்தில் பலவிதமான உலக மாயைகளில் சிக்கி தேவனை விட்டு தூரமானதால் என் தகப்பனாரும் என்னை வெறுத்து, 1975ம் ஆண்டு செப்டம்பர் மாதம் என்னுடைய 16ம் வயதில் என்னை வீட்டை விட்டே வெளியேற்றி விட்டார்கள். நன்கு படிக்க வாஞ்சையாய் இருந்த என் கல்லூரி படிப்பும் நின்று விட்டது.

என்னைக் குறித்து பரிதபித்தவர்கள் அநேகர். ஆனால் நேசித்து பராமரிப்போர் யாருமின்றி மனம் போன போக்கில் அலைந்து திரிந்து கூலி வேலைகளைச் செய்து என் வயிற்றை நிரப்பினேன்.

**மாயையான வாழ்வு**

இறுதியில் என் மூத்த சகோதரனுடைய உதவியால் கோவையில் மொத்த வியாபாரம் செய்யும் கடையொன்றில் வேலைசெய்யும்படி பணியாளராக அமர்த்தப்பட்டேன். ஆரம்ப நாட்களில் கடினமான வேலையாய் இருந்தாலும் மனதில் பொறுமையுடன் உண்மையாகப் பணியாற்றினேன். படிப்படியாக முன்னேறினேன். கைகளில் பணம் கிடைத்தது. சிற்றின்ப கேளிக்கைப் படங்கள் என் வாழ்வில் மன சமாதானத்தையும் நான் தேடும் அன்பையும் தரவில்லை. என்னைச் சுற்றி இருந்தவர்கள் என்னுடைய பணத்திற்காகவும் என் உண்மை உழைப்பிற்காகவும் நேசித்தார்களே தவிர உண்மையான அன்பைக் காட்டவில்லை. நான் தங்கியிருந்த வீட்டின் மாடியில் சென்று வானத்தைப் பார்த்து "அம்மா–அம்மா" என்று கண்ணீர் விட்டு அழுதேன். பாசமுள்ள குடும்பங்களைப் பார்க்கும்போது இப்படிப்பட்ட சிலாக்கியங்கள் எனக்கு இல்லையே என்று ஏக்கமுற்றேன். உலக வாழ்க்கை வேண்டாம் என்று முடிவு செய்து ஒரு பாட்டில் விஷத்தை எடுத்துக் குடித்து உயிரை மாய்த்துக் கொள்ள பிரயாசப்பட்டேன். அதுவும் பயனற்றுப் போய்விட்டது. நான் வேலை பார்த்த ஸ்தலத்திலும் என்னை வெறுக்க ஆரம்பித்தார்கள்.

**கிறிஸ்துவில் புதுவாழ்வு**

மறுபடியும் கோவைப் பட்டிணத்தில் செய்வதறியாது அலைந்து கொண்டிருந்த வேளையில் பாக்கியம் அம்மாள் அவர்கள் எனக்கு அறிவுரைகள் சொல்லி, அவர்கள் மகன் மோசஸ் சாம்சன் அவர்களிடம் பரிந்து பேசி அவர்கள் தொழிலைக் கவனிக்கும்படி வைத்தார்கள். என் மனதில் இன்னும் தேவ சமாதானம் இல்லை. ஞாயிற்றுக் கிழமை தோறும் போதகர். ஜோயல் ஆனந்தராஜ் அவர்கள் வீட்டிற்கு ஜெப ஆராதனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஆராதனை நடந்து கொண்டிருக்கும் வேளையில் அனைவரையும் வேடிக்கையாகப் பார்ப்பேன். கிட்டத்தட்ட அனைவருமே கல்லூரியில் படிக்கும் மாணவர்கள். பேராசிரியர்கள், மற்றும் உயர்நிலையில் இருப்பவர்கள். நான் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு இருக்கும் வேளையில் ஒரு தேவனுடைய பிரசங்க வார்த்தை எனக்கு நேராக வந்தது. "உலகத்தார் அன்பை விட கல்வாரி அன்புதான் மிகப்பெரியது." என்ற வார்த்தையின் மூலம் தேவன் என்னுடன் இடைபட்டார். கண்ணீருடன் கல்வாரி அன்பிற்காக ஜெபித்தபோது கல்வாரிக் காட்சியின் மூலம் கல்வாரி அன்பினால் என்னை நிரப்பினார். என் சரீரத்திலுள்ள பலவீனங்களை நீக்கி சுகத்தையும் தேவன் தந்தார். ஆராதனை வேளையில் (அனைவரும் துதித்துக் கொண்டிருக்கும்போது) தீர்க்கதரிசனமாக "தேவதாஸ்! யார் அந்த தேவதாஸ்? என்ற சத்தம் கேட்டது. நான் வேறு யாராவது நல்ல தேவதாஸ் இருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் என் மேல் அளவில்லாமல் ஊற்றப்பட்டார். என்னுடைய கடந்த கால வாழ்க்கையின் வீழ்ச்சியையும், வருங்காலத்தில் எனக்கு தேவன் தரும் (தற்போது நடக்கும்

ஊழியப்பாதை) தேவ திட்டத்தையும் தீர்க்கதரிசனமாக தேவன் உரைத்தார். ஒரு ஜாதி மக்களை உனக்குத் தருவேன். பவுலைப் போல அப்போஸ்தல ஊழியத்தை உனக்குக் கொடுப்பேன் என்று தேவன் வாக்குரைத்தார்.

**ஊழிய அழைப்பின் உறுதிப்பாடு**

போதகர் ஜோயல் ஆனந்தராஜ் அவர்கள் சபையில் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து வந்தேன். ஊழிய அழைப்பை சந்திக்க நேரமில்லாமல் பிற்காலத்தில் செய்து கொள்ளலாம் என்று நினைத்து கை நிறைய பணம் சம்பாதித்து ஊழியத்திற்குக் கொடுக்கலாம் என்று தீர்மானித்தேன். 2 வருடங்கள் கடந்து சென்றன. புதிதாய் நான் ஆரம்பித்த தொழில் காரியமாய் அலைந்து கொண்டிருந்த போது 1981 அக்டோபர் மாதத்தில் FMPB மூலமாய் நடத்தப்பட்ட கிதியோனியர் முகாமில் மறுபடியும் ஆண்டவர் என்னை சந்தித்தார். அந்த முகாமில் என்னுடைய சொந்த பட்டணமாகிய சிவகாசியில் 130 வருடங்களுக்கு முன்பாக இங்கிலாந்து தேசத்திலிருந்து வந்த ராக்லாண்டு துரை ஐயா அவர்கள் சுவிசேஷத்தைக் கூறி அறிவித்த சம்பவங்களைக் கூறினார்கள். தொப்பியில் கூழ் வாங்கி குடித்து, பல கஷ்டங்களையும் அனுபவித்தார். அவர் சுவிஷேசம் கூறும்போது சாணியையும் கற்களையும் அழுகிய பழங்களையும் அவர் மீது எறிந்தார்கள். அப்பொழுது அவர் “எல்லாவற்றையும் எறிந்துகொள், நான் சொல்வதையும் ஏற்றுக்கொள்” என்று மூதாதையாருக்கு சுவிசேஷம் கூறினார். ஓரிடத்தில் இரத்த வாந்தி எடுத்து மயங்கி விழுந்தார். இறுதியில் சிவகாசி மண்ணில் இரத்த சாட்சியாக மரித்தார் என்று சரித்திரம் கூறுகிறது. இன்று பல ஆயிரம் விசுவாசிகளுக்கு அநேக ஆலயங்கள் இருந்தாலும் அதில் மிகப் பெரிய ஆலயமான CSI ராக்லெண்டு நினைவாலையம் உண்டு என்று கூறக் கேட்டேன். இதன் மூலம் ஆண்டவர் என்னோடு பேசினார். ராக்லெண்ட் கோதுமை மணியாய் மறைந்து கோதுமை மணியாய் உன்னை உருவாக்கினார். நீ கோதுமை மணியாய் உன்னை ஒப்புக் கொடுப்பாயா? 90 கோடி மக்கள் வாழும் இந்த பாரத தேசத்திற்கு வெளி நாட்டு மிஷனெரிகள் வர முடியாது. நீதான் ராக்லெண்ட் என்று பேசினார். சந்தியா வேளையில் “என்னை நேசிக்கிறாயா? என் ஆடுகளை மேய்ப்பாயாக” என்று எனக்கு உரைத்த தீர்க்கதரிசன வார்த்தைகளை உறுதிப்படுத்தினார். மிஷனெரி ஊழியத்திற்குக் கீழ்ப்படிந்த என்னை தேவன் FMPB மூலமாக 1981 முதல் 1985 வரை வேதாகமப் பயிற்சி பெறவைத்து வட இந்தியாவில் உத்திரபிரதேசம், பீகார் மாநிலங்களில் பயன்படுத்தினார்.

**இல்லற வாழ்வின் ஆசீர்வாதம்**

1985ம் வருடம் ஜுலை 8ம் தேதி என்னை நேசிக்கவும், என்னோடு இணைந்து ஊழியம் செய்யவும் ஏற்ற துணையான IMS ல் ஒரிசாவில் பணியாற்றிக் கொண்டிருந்த மிஷனெரியான வஹிதா அவர்களை தேவன் எனக்கு வாழ்க்கைத் துணையாகக் கொடுத்தார். திருமணமாகி சில தினங்களில் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது கைகளில் வில், அம்பு வைத்துக் கொண்டு மலைகளில் ஓடும் மக்கள் மத்தியில் நாங்கள் சுவிசேஷசத்தைப் பிரசங்கிக்கும் தரிசனத்தை ஆண்டவர் காட்டினார். மேலும் கோவை பட்டிணத்தில் 14–7–1985ல் நடைபெற்ற திருமண

வைபவத்தில் மறுபடியும் தீர்க்கதரிசனமாக **ஒரு ஜாதி மக்களை உங்களுக்குத் தந்து ஆசீர்வதிப்பேன்** என்று நாங்கள் கண்ட தரிசனத்தின் மக்களையும் உறுதிப்படுத்தி எங்களை ஆசீர்வதித்தார். ஒவ்வொரு மனிதனுடைய வெற்றிக்குப் பின்புறம் மனைவி இருப்பாள் என்பது உலக மொழி; அதன்படி குடும்ப காரியங்களைப் பராமரிக்கவும் வருவோருக்காக ஜெபித்து ஆலோசனைகளை வழங்குவதிலும், ஊழியப் பொறுப்புகளில் பங்கு வகிக்கவும் தேவன் சகல கிருபைகளையும் அவளுக்குக் கொடுத்து, மூன்று பிள்ளைகளையும் தந்து குடும்பத்தை ஆசீர்வதித்தபடியால் தேவனைத் துதிக்கிறேன்.

**IMS மூலமாக நற்செய்திப் பணி**

தேவன் தரிசனத்தில் காட்டிய அதே பீல் மக்கள் மத்தியிலே மிஷனெரியாகச் சென்று பணித்தளத்தையும் மக்கள் கூட்டத்தையும் ஆய்வு செய்து ஊழியத்தை ஆரம்பிக்க ஆயத்தமா என்று கேட்டார். தேவனுடைய அழைப்பையும் தரிசனத்தையும் உறுதிப்படுத்தி 5வருடங்கள் குஜராத் துதியா என்ற பணித்தளத்தை கிறிஸ்தவர்களே அல்லாத லிம்கேடா தாலுகாகைக் கண்டுபிடித்து நான்கு ஆலயங்களையும், 5சுதேச ஊழியர்களையும் சுமார் 1000 ஆத்துமாக்களையும் தேவனண்டை வழிநடத்தவும் கிருபை செய்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக.

**தேவனுடைய தீர்மானத்தை நிறைவேற்றும் ஊழிய அழைப்பு**

1991ம் ஆண்டு ஜுலை மாதம் 78 லட்ச பீல் மக்களை தேவனண்டை நடத்துவதற்கான Sharing Love Mission – ஷாலோம் மிஷனெரி ஊழியத் திட்டத்தையும், நடத்துதலையும் தேவன் எங்களுக்குக் கொடுத்தார். நானும் எனது மனைவியும் ஜெபித்து இதுவரை தேவன் எங்களைக் கொண்டு உருவாக்கின சபைகள், ஊழியர்கள், ஆத்துமாக்கள் அனைத்து உடைமைகள் எல்லாவற்றையும் ஒன்றையும் இச்சிக்காமல் IMS ஸ்தாபனத்தில் ஒப்படைத்து விட்டோம். சுவிசேஷம் அறிவிக்கப்படாத வேதனை நிறைந்த அதே பீல் மக்கள் மத்தியில் அடுத்த தாலுகாவான ஜாலோத்தை பணித்தளமாக தீர்மானித்து எங்களுக்கு கிடைத்த பேய் பங்களாவில் ஊழியத்தை ஆரம்பித்தோம். அற்பமான ஆரம்பம் யார் அசட்டைப் பண்ணக்கூடும்?

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி அவரையே சார்ந்து கடந்த 19 வருடங்கள் எங்களை பயன்படுத்தி பீல் மக்கள் மத்தியில் 435 சுதேச ஊழியர்களையும் 520 சபைகளையும் பல்லாயிரம் குடும்பங்களையும் தேவன் தந்து ஆசீர்வதித்துள்ளார். தொடர்ந்து இனிவரும் காலங்களில் முழு பீல் மக்களுக்கு சுவிஷேசத்தை அறிவித்து, ஒவ்வொரு கிராமங்களிலும் சுதேச ஊழியர்களையும், சபைகளையும் உருவாக்குவதற்கும், பீல் ஆதிவாசி மக்கள் சமுதாயம் கிறிஸ்துவுக்குள் சாட்சியாகவும் தேசத்திற்கு ஆசீர்வாதமாகவும் அமைய எங்கள் குடும்பத்தை தேவன் பயன்படுத்த தொடர்ந்து எங்களுக்காக ஜெபிக்கவும் தேவன் தந்த தரிசனப்பணியை ஜெபித்துத் தாங்கவும் அன்புடன் கேட்கிறோம்.

***தேவனுக்கே மகிமை உண்டாவதாக!***

# ஷாலோம் திருமண்டலம்

## சிறப்பு கண்ணோட்டம்



**“நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்படியாதவனாயிருக்கவில்லை”. அப் 26:19**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, தேவ கிருபையால் 01.07.91 அன்று தேவன் தந்த பீல் மக்கள் தரிசனத்துடன் அன்று அற்பமாக ஆரம்பிக்கப்பட்ட ஷாலோம் ஊழியங்களை பரிசுத்த ஆவியானவர் கடந்த 19 வருடங்களில் 520 கிராமங்களில் சபைகளை ஸ்தாபிக்கவும், 435 பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பவும் கிருபை தந்தார். அதிகமான ஜெபத்துடன் பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி நமது சபை பணிகளை Shalom Diocese in India என்ற திருமண்டல அமைப்பை உருவாக்க சபைகளை ஒருங்கிணைத்துள்ளோம். அடியேனை பேராயராகவும், தெரிந்தெடுக்கப்பட்ட 77 சுதேச ஊழியர்களை போதகர்களாகவும் பிரதிஷ்டை செய்து வைக்க தேவன் கிருபை தந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

அநேக திருச்சபை தலைவர்கள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், விசுவாசிகள் வாழ்த்துக்களை அனுப்பி உற்சாகப்படுத்தினார்கள். அவர்களுக்கு தேவ நாமத்தில் நன்றி கூறுகிறேன். ஆனால் சிலர் ஏன் இந்த திருமண்டல அமைப்பு? என்றும் மிஷனெரியாக இருந்த நீங்கள் பேராயராக ஏன் மாறிவிட்டீர்கள்? என்றும் கேட்டார்கள். ஆகவே இந்த சிறிய தொடர் மூலம் சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

## முதலாவது இது வேதாகமத்தில் உள்ள வழி நடத்துதல்

அப்போஸ்தல நடபடிகளை வாசியுங்கள். பரிசுத்த பவுல் புறஜாதி மக்களுக்கு சுவிசேஷம் கூறி அழைக்கப்பட்டார். சுவிசேஷத்தைக் கூறி பாவம், சாபம், நோய்களிலிருந்து விடுதலை பெற்றார்கள். அதன்பின்பு சபை கூடுதலை ஆங்காங்கே எழுப்புகிறார். எழுதப்பட்ட நிருபங்களையும், அப்போஸ்தல நடபடிகளையும் வாசிக்கும்போது காண்கிறோம். அதன் பின்பாக அப்போஸ்தலர்கள் குறிப்பாக பவுல் ஒவ்வொரு சபைகளிலும் மூப்பர்களை ஏற்படுத்துவதையும் வாசிக்கிறோம். மேலும் சபையில் 5 வகையான ஊழியங்கள் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்களை தேவன் எழுப்புவதை காண்கிறோம். சபைகளுக்கான பொறுப்புகள், மேய்ப்பனின் பொறுப்புகள், விசுவாசிகளின் வாழ்வு அனைத்தையும் நிருபங்களில் வாசிக்கிறோம். அதன்பின்பு கண்காணிகளையும் பவுல் உருவாக்கி பொறுப்புகளை தருகிறார். சுவிசேஷம் அறிவிக்க நாம் மிஷனெரிமார்களை, சுதேச ஊழியர்களை தாங்குவதின் நோக்கம் சபைகள் உருவாக்கப்பட வேண்டும். நம்முடைய தமிழ்நாட்டில் நானூறு ஆண்டுகளாக மிஷனெரி ஸ்தாபனங்கள் மிஷனெரிகளை அனுப்பி சுவிஷேசம் அறிவித்து, சபைகளை ஸ்தாபித்து திருமண்டலங்களை நமக்கு கொடுத்திருக்கிறார்கள். அதுபோலவே ஷாலோம் ஊழியத்தையும் தேவன் ஆசீர்வதித்து ஆத்துமாக்களையும், சபைகளையும் 19 வருடங்களில் பெருகச் செய்துள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**இரண்டாவதாக** சபைகள் பெருகும்போது அவைகளை ஒருங்கிணைத்து சபைக்கான ஆவிக்குரிய ஒழுங்குகள், தேசத்தின் சட்டத்திட்டங்களை மதித்து, சபைமக்கள் மத்தியிலும் சாட்சியாக விளங்க வேண்டும். அநேக முறை எதிர்ப்புகளால் நம் ஊழியங்கள், ஊழியர்கள் பாதிக்கப்படும்போது அரசாங்கத்தார் இது எந்த சபை? சபைக்கான ஒழுங்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதா? போதகருக்கான ஒழுங்குகள் உண்டா? நல்ல காரியங்களை செய்கிறீர்கள் நல்லது தான் ஆனால் பிரச்சாரம் பண்ணும் குழுவா? இல்லை சபைக்கான ஒழுங்குகளா? என கேட்கப்படுகிறது. மேலும் சபை வளரும் போது அனைத்து Records, Documents மற்றும் ஞானஸ்நானம், திருமணம், மரணம் இவைகள் எல்லாம் ஒழுங்காக பதிவு செய்யப்பட வேண்டும். அப்படியானால் மிஷனெரி பணிக்கான இயக்கத்திலிருந்து சபைக்கான ஒழுங்கு காரியங்களை கொண்ட அமைப்பில் இணைக்கப்பட வேண்டும்.

❖ தேவன் நமக்கு தந்த 520 சபைகளை 19 வருடங்கள் நாம் பாடுபட்டு ஆவிக்குரிய பெற்றோராக நாங்கள் பராமரித்து வந்து தேவ பணியை மற்ற Denomination (சபை பிரிவுகளில்) கொடுப்பதில் பல காரியங்களில் சிரமமாக உள்ளது.

❖ தேவன் ஷாலோம் ஊழியத்தின் மூலம் உருவாக்கின அனைத்து சபைகளில் பணிபுரியும் போதகர்கள் ஊழியத்திற்காக நியமிக்கப்படவில்லை. அவர்கள் ஊழியத்திற்காக எழுப்பப்பட்டு சபைகளை அவர்களே உருவாக்குகின்றார்கள்.

❖ அவர்களுக்கு நாம் ஊதியம் கொடுப்பதில்லை. Theology (வேதபட்டம்) முடித்து வந்து போதகராக யாரையும் நியமித்து ஊதியம் வழங்குவதில்லை. 77 குருத்துவ அபிஷேகம் பெற்ற போதகர்கள் விசுவாசத்தினால் தேவன் தரும் காணிக்கையை வைத்து Self Support ஊழியராகவும் அதே நேரம் Church Network Diocese–க்கு ரூ.50 சதவீதம் காணிக்கைகளை கொடுத்தும் வருகிறார்கள்.

❖ எல்லா ஊழியர்களும் தங்கள் சொந்த கிராமத்திலேயே எழுப்பப்பட்டு, சொந்த கிராமத்தில் அவர்கள் நிலத்தை காணிக்கையாய் தந்து அங்கு ஆலயம் கட்டி 7–10 மூப்பர்களை பயிற்றுவித்து 100 குடும்பங்களை தேவனண்டை நடத்திவருகிறார்கள். எனவே அவர்களுக்கு Transfer கிடையாது. எதாவது பெரிய பிரச்சனைகள் வரும்போது 7–12 மூப்பர்கள் ஜெபித்து ஆலோசித்து தீர்மானங்களை ஆவியானவரின் ஒத்தாசையுடன் எடுப்பார்கள்.

ஆகவே நாம் எந்த சபை பிரிவுகளுக்கும் நம் சபைகளை கொடுத்துவிடவில்லை. ஆவியானவரின் நடத்துதலின்படி Shalom Diocese in India என்ற திருமண்டல அமைப்பை உருவாக்கி மிஷனெரி பணி மூலம் வரும் சபைகளை இணைத்து வருகிறோம்.

இந்திய கிறிஸ்தவ அமைப்பு ஒழுங்கின்படி மூன்று திருமண்டல பேராயர்களால் புது திருமண்டலம் (Diocese) பிரதிஷ்டை செய்யப்படவும், புதிய பேராயர் மற்றும் போதகர்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்கள். அந்த மகிமையான வைபவ ஆராதனைகளை நடத்தி ஆசீர்வதிக்க Anglican Bishop-மார்கள் மற்றும் Arch-Bishop Most.Rev.Dr. Duraisingh James, Most.Rev.Dr. John Sathiakumar, Rt.Rev.Dr. John S.D. Raju முன்வந்தார்கள். தேவதிட்டத்தின்படி

**20.11.09** அன்று Shalom Diocese மற்றும் Bishop Consecration மற்றும் 77 போதகர்களும் பிரதிஷ்டை ஆராதனைகளும் தேவ மகிமை விளங்கும்படியாய் நடைபெற்றது. மற்றபடி Anglican திருச்சபையிலோ வேறு எந்த சபைப் பிரிவுகளிலோ நாம் இணைந்துவிடவில்லை.

Shalom Diocese–க்கான அனைத்து ஆவிக்குரிய மற்றும் சபை ஒழுங்குகளுக்கான சட்டதிட்டங்களை மூத்த சபை தலைவர்கள் மற்றும் Christian Institute Management (CIM) சேர்ந்த அன்பு **சகோ. ஜெயக்குமார்** அவர்கள் பணித்தளத்திற்கு வந்து பார்வையிட்டு பலநாட்களாக ஜெபித்துக் கூடி ஆலோசித்து Shalom Diocese-க்கான Church Constitution உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் குழுவாக இணைந்து திறம்பட செயல்படுத்த காரியங்களை ஜெபத்துடன் செய்து வருகிறோம்.

இந்த பிரதிஷ்டை வைபவங்களுக்கு பின்பு மூன்று மாநிலங்களிலுள்ள ஷாலோம் சபை போதகர்களை மற்ற சபையார், கிராம பஞ்சாயத்து தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் அனைத்து சமுதாயத்தினரும் மிக மதிப்புடன் நடத்தி வருகிறார்கள். சபை ஒவ்வொரு கிராமங்களில் இயேசுவின் நாமத்தினால் உயர்த்தப்படுகிறது. மட்டுமல்லாமல் சபை தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற அர்ப்பணித்துள்ளது. இவ்வருடம் அடுத்த 100 சபை ஊழியர்கள் Church Network –ல் (Diocese) –ல் இணைய ஆயத்தமாகி வருகிறார்கள். அனைவரும் B.Th Degree Alahabad Bible Seminar மூலமாக படித்துள்ளார்கள்.

**SHARING LOVE MISSION** - 7000 பீல் ஆதிவாசி கிராமங்களில் மிஷனெரி பணிகளை தொடர்ந்து நடத்தி, 7000 சுதேச ஊழியர்களை உருவாக்கி, சபைகளை கட்டி எழுப்பும்.

**SHALOM DIOCESE IN INDIA –** அமைப்பில் கட்டப்பட்ட சபைகள் இணைக்கப்பட்டு அவை அனைத்தும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும், சபை ஒழுக்கங்களுடன் தன் பணிகளை நிறைவேற்றும் கிறிஸ்து இயேசுவின் இரண்டாம் வருகைக்கு சபைகள் ஆயத்தமாக்கப்படும்.

**SHALOM CHARITY MISSION** அமைப்பின் மூலமாக ஆதிவாசி மாணவர்களின் கல்விப்பணி, மருத்துவம், குடிநீர் சமுக மேம்பாட்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு கிறிஸ்துவுக்குள் மகிமையான பீல் சமுதாயம் உருவாக்கப்படும்.


எனவே அன்பானவர்களே Diocese ஆனவுடன், பேராயர், போதகர்கள் பிரதிஷ்டை செய்தவுடன் தரிசனப்பணி நிறைவு பெறவில்லை. இது ஆரம்பம். இது விதைக்கப்பட்டுள்ளது. அடுத்த 20 ஆண்டுகளில் பீல் ஆதிவாசி திருச்சபைகள் Shalom Diocese in India பாரத தேச திருச்சபைக்கு சாட்சியாக, வெளிச்சமாக, ஆசிர்வாதமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

ஷாலோம் சபைகள் ஆவியானவரின் அபிஷேகத்திற்குள் நிரப்பப்பட்ட சபைகளாகவும் ஷாலோம் சபைகள் ஜெபித்து ஆத்தும ஆதாயம் செய்யும் சபைகளாகவும் மேலும் ஷாலோம் சபைகள் தேவனுக்காக கொடுத்து உதவும் சபைகளாகவும் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக்கப்பட்ட சபைகளாகவும் விளங்க தொடர்ந்து ஜெபித்துத் தாங்குங்கள்.


தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

# T¦jR[j§tÏ AYNWUôLj úRûYlTÓm ETLWQeLs

❖ கூட்டங்கள் முகாம்கள் நடத்துவதற்கு ஆம்பிளிபயர், ஸ்பீக்கர், மைக், மிக்சர் (ரூ.1 லட்சம் மதிப்பில்)






❖ பணித்தள காரியங்களை வீடியோ எடுக்க, மற்றும் செய்திகளை வீடியோ எடுத்து கிராமங்களில் உள்ள நம்முடைய விசுவாசிகளுக்கு அனுப்ப நல்ல ஒரு வீடியோ கேமரா (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)



❖ ஆடியோ ரெக்கார்டிங் ரூம் அமைக்கப்பட (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)

❖ ஆடியோ ரெக்கார்டிங் –ற்கான உபகரனங்கள் – பீலி, பிலோடி, வாகுடி மொழிகளில் பாடல்கள், மற்றும் செய்திகள் 1000 கிராம சபைகளுக்கு அனுப்பபட (ரூ.1.5 லட்சம் மதிப்பில்)



❖ 10 முக்கிய ஊழிய பொறுப்பாளர்களுக்கு 10 மோட்டார் சைக்கிள் தேவை (ரூ. 35,000 x 10)



❖ Training Unit & Communication Department க்கு 3 கம்ப்யூட்டர் தேவை (ரூ. 30,000 x 3)



❖ ஆராதனைகள் சிறப்பாக நடத்துவதற்கு Drum Set (ரூ.50,000) மற்றும் Pad (ரூ.30,000) தேவை



❖ மூன்று மாநிலங்களில் உள்ள பணித்தளங்களில் கூட்டங்களை நடத்துவதற்கு நல்ல 3 ஜெனரேட்டர்கள் தேவை. (ரூ. 40,000 x 3)



***தேவைகளுக்காக ஜெபியுங்கள் கர்த்தர் உங்கள் உள்ளங்களில் பேசினால் மேற்கண்டவற்றில் ஏதாவது வாங்க காணிக்கையாகவோ அல்லது மேற்கண்ட உபகரணங்களாகவோ வாங்கிக் கொடுக்கலாம். கர்த்தர்தாமே உங்கள் குடும்பத்தை, ஊழியங்களை, தொழிலை ஆசீர்வதிப்பாராக...***

## உங்கள் உதவி வேண்டுகிறோம்....

- ❖ அனுதினமும் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக மறவாமல் ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்க
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.
- ❖ மாதந்தோறும் குறைந்தது 10 நபர்களிடமாவது காணிக்கை பி ாலோம் ஊழியங்களுக்கு அனுப்பி ஒரு பிரதிநிதியாக செயல்பட அழைக்கிறோம். பிரதிநிதியாக செயல்படுவோர் இந்த ஊழியத்தில் மிகவும் முக்கியமானவராவார். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாரா



இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

நாள்
**20.02.2010, சனிக்கிழமை**

நேரம்
**மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை**

இடம்
**ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

சிறப்பு செய்தி : ***Rev. P. பாலசுந்தரம்*** Bible Believers Assembly, காப்புகாடு.

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு:– **சகோ. செல்வதுரை, Cell : 94876-89869,**
**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**



# காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் “V. DEVADOSS” (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

தொடர்ந்து 23 ஆண்டுகள் மேற்கு வங்கத்தின் முதல்வராக இருந்த மார்க்சிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஜோதிபாசு கடந்த மாதம் 17ம் தேதி மரணமடைந்தார். மறைந்த முன்னாள் முதல்வர் ஜோதிபாசுவிற்கு மார்க்சிஸ்ட் கட்சி தலைமை அலுவலகத்தில் இறுதி அஞ்சலி நடந்தது. வழி முழுக்க பொதுமக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். பின்னர் அரசியல் தலைவர்கள் அனைவரும் ஜோதிபாசுவிற்கு அஞ்சலி செலுத்தினர். இறுதிச் சடங்குகள் முடிந்தபின் அவரது உடல் மருத்துவ மாணவர்களின் ஆராய்ச்சிக்காக அரசு மருத்துவமனை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

---

தனித்தெலுங்கானா விவகாரம் ஆந்திராவில் மீண்டும் பற்றி எரிய தொடங்கிவிட்டது. தெலுங்கானாவில் தனித் தெலுங்கானா அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தி ஜனவரி 19ம் தேதி அன்று உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர் வேணுகோபால் தீ குளித்தார். அதன்பின் மாவட்ட நிர்வாகத் துறையில் பணியாற்றும் 40 வயதான சுரா நேரு நாயக் என்பவரும், அன்று இரவு சுவர்னா என்ற கல்லூரி மாணவியும் தனித் தெலுங்கான அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தி கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதனால் இயல்பு வாழ்க்கை முற்றிலுமாக முடங்கியுள்ளது.

---

பி.சி.சி.ஐ சார்பில் நடத்தப்பட்டு வரும் ஐபிஎல் 20&20 கிரிக்கெட் போட்டிகளை அமெரிக்காவில் நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அந்நாட்டில் கிரிக்கெட்டை பிரபலப்படுத்தும் விதமாக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அநேகமாக ஐபிஎல் 4 வது சீசனில் ஒரு சில ஆட்டங்கள் அமெரிக்காவில் நடைபெறும் என தகவல்கள் வெளியாகியுள்ளது.


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

<u>தலைமை அலுவலகம்</u>

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

கிராம ஆலயம்

# தேத்லா

மத்தியப்பிரதேசம்



தேத்லா என்பது மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் ஜாபுவா மாவட்டத்திலுள்ள ஒரு கிராமமாகும். பயங்கரமான கொள்ளைக்காரர்களுக்கும், திருடர்களுக்கும், மந்திரவாதிகளுக்கும் அதிகமாக வாழும் கிராமமாகும். இக்குள்ள மக்கள் குடித்து வெறித்து மிகவும் அந்தகாரத்திற்குள் வாழ்ந்து வருபவர்கள். இவர்கள் இயேசுவின் பெயரை ஒரு முறைகூட கேள்விப்படாதவர்கள். இவர்கள் மத்தியில் வாழ்ந்தவர்தான் சகோ. பிதியாபாய் பன்தா. இந்த சகோதரனின் மகனான முகேஷ் பன்தாவிற்கு விஷபூச்சி கால் கடித்து கால் முழுவதும் அழுகிய நிலையில் காணப்பட்டது. இதற்காக மருத்துவம் செய்தும், பல இடங்களுக்குச் சென்று மந்திரம் மற்றும் பூஜைகளும் செய்தும் குணமாகவில்லை. இந்த சூழ்நிலையில் முண்டத் கிராமத்தில் நடந்த கிராமத்தில் கலந்து கொண்டனர். சுதேச ஊழியர் இவரது மகனுக்கு எண்ணெய் பூசி ஜெபித்தார். அந்த மகனுக்கு பூரண சுகம் கிடைத்தது. அதன்பின் இவரது மகள் பபீலா பிசாசின் பிடியில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். இவளை ஆலயத்திற்கு அழைத்து வந்து ஜெபித்தபோது பிசாசிடமிருந்து விடுதலை பெற்றாள். இந்த அற்புதங்களைப் பெற்றுக் கொண்ட குடும்பம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டது. அதன்பின் சகோ. பிதியாபாய் பன்தா. 2003ம் ஆண்டு சுதேச ஊழியர் சகோ. ரன்சிங் பாபோர் மூலமாக தனது வீட்டில் கூட்டதை ஆரம்பித்தார் அதன்பின் தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியம் என உணர்ந்து இவர்கள் ஜெபித்தபோது, ஜெபத்திற்கு வரும் மூப்பர் தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகத் தந்தார். இந்த நிலத்தில் தேவநாமம் மகிமைப்படும்படியாக ஒரு ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இந்த கிராம ஆலயத்தில் தற்போது சுமார் 53 குடும்பங்கள் கூடி தேவனை ஆராதிக்கின்றனர். இந்த ஆலயத்தில் சகோ. ரன்சிங் பாபோர் ஊழியம் செய்து வருகிறார்.

இந்த கிராம ஆலயம், இயேசு விடுவிக்கிறார் கிராம ஆலயத் திட்டம் – 2009– ன்

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 60 ஆயிரம் மதிப்பில் ஆலயங்கள் கட்டுவதற்கு நிதி உதவி கொடுக்க முன் வாருங்கள்.**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

## நமது பணித்தளத்தில் நடைபெற்ற
# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகள்



மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை



விசுவாசிகளுடன் சகோ. கிளாஸ்டன் குடும்பத்தார்

தேவனுடைய பெரிதான கிருபையினால் குஜராத் பரோடாவில் Airforce–ல் பணியாற்றிக் கொண்டிருக்கும் அன்பு சகோ. கிளாஸ்டன் அவர்கள் குடும்பத்தினர் சார்பில், இராஜஸ்தான் மாநிலம் பான்ஸ்வாடா மாவட்டத்திலுள்ள சத்திரகட் பணித்தளத்தில் ஊழியம் செய்துவரும் சுதேச ஊழியர் வஜ்ஹிங் மேடா குடும்பமும் மத்தியப்பிரதேசம் மாநிலம் ஜாபுவா மாவட்டத்திலுள்ள பாண்டாகேடா பணித்தளத்தில் ஊழியம் செய்து வரும் மால்சிங் மேடா குடும்பமும், ஊழியர்களாக 20.12.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள்.

இந்த பிரதிஷ்டை ஆராதனை குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டத்திலுள்ள நமது ஷாலோம் திருச்சபையான கங்கேலா திருச்சபையில் வைத்து நடைபெற்றது. ஷாலோம் சபை போதகர்களான சுரேஷ் ஹட்டிலா மற்றும் ரத்தன் மாவி இவர்களுடன் பேராயர் வே. தேவதாஸ் அவர்களும் இணைந்து பிரதிஷ்டை செய்து வைத்தனர். சகோ. கிளாஸ்டன் அவர்கள் குடும்பத்துடன் குறிப்பாக அவருடைய அன்புத் தாயார் மணியம்மாள் செல்லப்பா அவர்கள் மதுரையிலிருந்து வந்திருந்து சாட்சி கொடுத்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஷாலோம் ஊழியங்களையும், பீல் மக்களையும் நேசித்து, ஜெபித்துத் தாங்கும் அன்பான குடும்பத்திற்காக தேவனைத் துதிக்கிறோம்.

நீங்களும் மாதம் ரூ. 2000/– கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம். உங்கள் நண்பர்கள், உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்துங்கள்.

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss